Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 34 சுபகிருது வருடம், ஆடி மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை
(08.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 09 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## எம்.பிக்களின் எரிபொருளால் 3 கோடி ரூபா செலவு அதிகரிப்பு

02 பக்கம்

## மத்திய அதிவேக நெடுஞ்சாலை கடனை இடைநிறுத்திய சீனா



02 பக்கம்



ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்திற்குச் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. அங்கு மீனவர்களுடன் மீன்வலை இழுப்பதைக் காணலாம்.

# நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்ய இயலாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



02 பக்கம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கின்ற முதலாவது தேங்காயை ரணில் அடித்துள்ளார்

### சி.வி.கே.சிவஞானம் யாழில் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருடைய பாணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கின்ற முதலாவது தேங்காயை உடைத்து இருக்கின்றாரென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். 02 பக்கம்

## புளொட் தேசிய மாநாட்டில் நிறைவேறிய 21 தீர்மானங்கள்

### அதன் செயலாளர் அறிவிப்பு



யாழ்ப்பாணத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாடு நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிலையில், அக்கட்சியின் செயலாளர் நா.இரட்ணலிங்கம் பொதுச்சபை கூட்ட தீர்மானங்களை தேசிய மாநாட்டில் அறிவித்தார்.

யாழ்ப்பாணம் இணுவிலிலுள்ள சுந்தரம் அரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை... 02 பக்கம்

# கப்பலைத் தடுத்தால் இனி உதவியில்லை!

## இலங்கையிடம் திட்டவட்டமாக அறிவித்தது சீனா

## இராஜதந்திர நெருக்கடியில் சிக்கியது கொழும்பு



நமது அரசியல் செய்தியாளர்

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தரவுள்ள தனது இராணுவக் கப்பலை இந்தியாவின் சொல்லைக்கேட்டு இலங்கை அரசாங்கம் தடுத்துநிறுத்துமாயின், இனிமேல் இலங்கைக்கு உதவிகளை செய்வது குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டிவருமென சீனா திட்டவட்டமாக இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தன.

இலங்கையுடன் பரஸ்பர சிநேகபூர்வ உறவுகளைக்கொண்டிருக்கும் சீனாவை,... 02 பக்கம்

## அவசரகாலச் சட்டத்தில் சில திருத்தங்கள்




ஜூலை 18ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் சில சரத்துகள் பொது பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் திருத்தப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை (05) வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, தேடுதல் மற்றும் கைது தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் 365 (அ) மற்றும் 365 (ஆ) சரத்துகள் நீக்கப்பட்டு அதே பிரிவின் 408 மற்றும் 410 முதல் 420 வரையான சரத்துகள் அவசரகாலச் சட்டங்கள் தொடர்பாக சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், உயர் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் விதிக்கப்படும் தண்டனைகள் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட அவசர உத்தரவுகளின் கீழ், குற்றவியல் சட்டத்தின் 365, 365 (அ) மற்றும் 365 (ஆ) ஆகிய பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

## ஐ.தே.க. - ஐ.ம.ச. ஒன்றிணைந்து செல்ல யோசனை முன்வைப்பு

யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மீண்டும் ஒன்றிணைந்து புதிய அரசியல் பயணத்தில் ஈடுபட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்திக்குள் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த யோசனை தற்போதுவரை கலந்துரையாடல் மட்டத்தில் மாத்திரமே உள்ளதாகவும், இந்த யோசனை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார விரைவில் தீர்மானம் எடுப்பாரென எதிர்பார்ப்பதாகவும் கட்சியின் சில உறுப்பினர்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாக அறிய முடிந்தது.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்படவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் நேரடியாக இணைந்து ஆதரவளிக்க வேண்டுமென ஒரு தரப்பும் அரசாங்கத்துடன் இணையாது வெளியிலிருந்து ஆதரவளிக்க வேண்டுமென மற்றொரு தரப்பும் தங்களுடைய... 02 பக்கம்

## எதிர்ப்பு வாரத்திற்கு தயாராகும் ஆசிரியர்கள்

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருடைய கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 8ஆம் திகதிமுதல் எதிர்ப்பு நடவடிக்கையிலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடப் போவதாகவும் இவ்வாரத்தை எதிர்ப்பு வாரமாகவும் ஆசிரிய தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதற்கு மேலாக ஜோசப் ஸ்டாலின் 12ஆம் திகதிக்குள் விடுதலை செய்யப்படாவிட்டால் அடுத்தகட்டமாக கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும், அது தொடர்பான விவரங்களை பின்னர் அறிவிப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி ஆட்சியில் இணைவதாகக் கூறவில்லை

### விமல் வீரவங்ச தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

"நாம் சர்வகட்சி ஆட்சியில் இணைவோம் என்று யாரிடமும் கூறவில்லை. அவ்வாறு இணைந்தால் அதனை மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்போம்" என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் சர்வகட்சி அரசாங்கத்தில் இணையப்போவதாக வெளிவரும் செய்திகளை மறுத்து நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## உஷ்



கொழும்பில பிரபல சிங்கள பாடகர் ஒருவரின் இல்ல திருமண நிகழ்வுக்கு பாதுகாப்புத்துறையின் உயரதிகாரிகள் சென்றிருக்கின்றனர்.

அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரணிலை கேலி செய்து பாடல்கள் இசைக்கப்பட்டதால் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிப்போயினராம்.

பாதுகாப்புச் செயலர் மற்றும் படைத்தளபதிகள் அதிருப்தியுடன் இடைநடுவில் அங்கிருந்து வெளியேறியதாக தகவல்.

## கடன் வழங்க நிபந்தனையாக 40 அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தல்

### சர்வதேச நாணய நிதியம் முன்வைப்பு - கிரியெல்ல எம்.பி.



"சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கான நிபந்தனையாக 40 அரச நிறுவனங்களை தனியார்மயமாக்கும்படி கோருகிறது" - என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தனியார்மயப்படுத்தும் திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்போது, எதிர்க்கட்சியாக பொறுப்புடன் செயற்படுவோம் என்றும் தெரிவித்தார். 02 பக்கம்

## மே 30 முதல் 21 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்: 23 பேர் பலி!



கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரை நாடு முழுவதும் 21 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

'வீட்டில பிரச்சின நோனா...
நாட்டில பிரச்சின சீனா...'



## எம்.பிக்களின் எரிபொருளால்...

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவை, தற்போதுள்ள விலையிலேயே வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தினால் கடந்த மாதம் அதற்காக செலுத்த வேண்டிய மேலதிகத்தொகை மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகம் என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருட்களின் விலைகள் அவ்வப்போது அதிகரித்து வந்தாலும், முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் தீர்மானத்தின்பேரில், கடந்த ஜனவரி மாதம் நிலவிய விலைக்கேற்ப நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இதன்படி ஒரு லீற்றர் எரிபொருளுக்கு எம்.பிக்கு வழங்கப்படும் தொகை 120 ரூபாவாகும். ஆனால் புதிய முடிவின்படி, தற்போதுள்ள விலையின்படி லீற்றருக்கு வழங்கப்படும் தொகை 450ரூபாவாக இருக்கும். கொழும்பு மாவட்ட எம்.பிகளுக்கு மாதாந்தம் 280லீற்றர் எரிபொருள் வழங்கப்படுகிறது.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட உறுப்பினர்களுக்கு 350லீற்றரும் கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்ட உறுப்பினர்களுக்கு 420லீற்றரும், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்ட உறுப்பினர்களுக்கு 490லீற்றரும் வழங்கப்படும்.

அத்துடன் பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, பதுளை, வவுனியா, திருகோணமலை, அநுராதபுரம், மொனராகலை ஆகிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 560லீற்றர் எரிபொருளும் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், திகாமடுல்ல, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 630லீற்றர் எரிபொருளும் தேசியப் பட்டியல் எம்.பி.க்கு 400லீற்றர் எரிபொருளும் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சர்வகட்சி ஆட்சியில்...

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ளவுள்ளதாக நான் கூறியதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது கூறிய விடயத்தை மேற்கோள்காட்டி தற்போதுவரை வெளியான செய்திகள் போலியான செய்திகள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாக மாறியுள்ள இந்த நிலையில், இதனை கட்டுப்படுத்துவதற்கு சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே சரியான வழி என்பதை நாங்களே, நாட்டுக்கு முதலில் சுட்டிக்காட்டினோம். இந்த யோசனையை நாங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் முன்வைத்தபோதிலும், அவர் அதனை உரிய முறையில் கவனத்தில் கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும், ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்ததோடு, அரசியலமைப்பு ரீதியாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், அரசாங்கத்தில் நேர்மைத்தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்பதோடு, அதனை விரைவில் முன்னெடுக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினோம். இதற்காக, பொது மக்களின் நம்பிக்கை மற்றும் சர்வதேச நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசாங்கமொன்றையும் விரைவில் ஸ்தாபிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டிருந்தோம். அத்தோடு, நின்றுவிடாது, தேசிய சுதந்திர முன்னணியாகிய நாங்கள் ஜூலை 28ஆம் திகதி, தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை மேலும் வளர்ச்சியடையாமல் தடுப்பதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக பொது தேசிய வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்காக 12 யோசனைகளை உள்ளடக்கி, யோசனை திட்டமொன்றையும் முன்வைத்தோம். மேலும், பொது தேசிய வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்காக அழைக்கப்பட்ட, சர்வகட்சி மாநாட்டில் அதிகம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய 10முன்மொழிவுகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

பொது தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகவே சர்வகட்சி அரசாங்கம் அவசியமாகின்றது. எங்களின் ஆலோசனைகளை கருத்தில்கொண்டு எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் குறைந்தபட்ச பொது தேசிய வேலைத்திட்டம் குறித்து நாங்கள் அவதானத்துடனே இருக்கின்றோம். அதனை நடைமுறைப்படுத்த சர்வகட்சி அரசாங்கத்துடன் இணைந்தால் அதனை பகிரங்கமாக மக்களுக்கு தெரிவிப்போம்.

## தமிழ்த் தேசியக்...

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) பத்தாவது தேசிய மாநாட்டில் நேற்று உரையாற்றும்போதே சி.வி.கே.சிவஞானம் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்ததாக ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்ரமசிங்க செய்திருக்கின்றார். அந்தளவிற்கு தமிழ்க் கூட்டமைப்பு தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்து செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியை தொடர்வார்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் உப கட்சியினுடைய நிகழ்வே இது. இங்கு அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே. தற்போது அது உடைந்திருந்தாலும்கூட அடிப்படையில் தமிழரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது என்றார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்படலாம் என்று தற்போது பேசப்பட்டு வருகின்றது. ஆனால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என நான் நம்பவில்லை என்றார்.

## மே 30முதல் 21...

துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் பெரும்பாலானவை போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றக் கும்பல்களுடன் தொடர்புடையவை என்றார்.

இறந்தவர்களும் இவ்வாறான மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் எனவும், சில துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் வெளிநாடுகளில் இருந்து செயற்படும் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

துப்பாக்கிச்சூடு தொடர்பாக பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றத்தை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், துப்பாக்கிச்சூடு தொடர்பாக விசாரணைகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமானவர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகளில் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ள அதேவேளையில் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸ் தலைமையகம் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றார்.

## ஐ.தே.க. - ஐ.ம.ச...

யோசனைகளை முன்வைத்துள்ளதால், இது குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் அக்கட்சியுடன் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவ்வாறில்லாத பட்சத்தில் சில உறுப்பினர்கள் சஜித்தை விட்டு விலகிச் சென்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் முடிவில் இருப்பதாகவும் அறிய முடிந்தது.

## கடன் வழங்க...

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்ததாகவும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் அடையாளத்தை பாதுகாத்துக்கொண்டு, அரசாங்கத்திற்கு தேவையான ஆதரவை வழங்க முடியும் எனத் தெரிவித்த அவர், அதற்காக அரசாங்கத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் குறிப்பிட்டார்.

இன்றைய அரசாங்கம் ராஜபக்ஷக்களின் குப்பை லொறி என்பதால் அதில் இணைய வேண்டிய அவசியமில்லை எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

## மத்திய அதிவேக...

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதல்கட்ட கட்டுமானத்திற்கு தேவையான 51 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை சீனாவின் அரசுக்கு சொந்தமான எக்சிம் வங்கி நிறுத்தி வைத்துள்ளது. இதனால் இந்த திட்டத்தை முன்னெடுப்பதில் அரசாங்கம் புதிய நெருக்கடியில் சிக்கியுள்ளது.

கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான 37 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கிய திட்டத்தில் பணிபுரிந்த சுமார் 500 சீனர்கள் உடனடியாக வெளியேறத் தொடங்கியுள்ளதாகவும், இதன் விளைவாக அங்கு பணியாற்றிய 2,000 உள்ளூர் மக்களும் வேலையிழக்கும் ஆபத்தில் இருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்துவதை நிறுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவைக் கருத்தில் கொண்டு சீனாவின் எக்சிம் வங்கியின் நிதி வெளியீடு முக்கியமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடனை இடைநிறுத்துவதன் மூலம் திட்டம் தாமதமடையும். இதனால், சீனாவின் உலோகவியல் கட்டுமான நிறுவனத்திடமிருந்து (MCC) இலங்கை அரசாங்கத்திற்கு அபராதம் விதிக்கப்படும் அபாயமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 செப்டெம்பரில் தொடங்கப்பட்ட இந்த திட்டம், 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

இதுவரை இலங்கை அரசாங்கத்தின் 33பில்லியன் ரூபா நிதியில் சுமார் 32வீதமான வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பாறைகளை வெடிக்கத் தேவையான டீசல் மற்றும் வெடிமருந்துகள் இல்லாததால் சமீபத்திய மாதங்களில் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுமான திட்டத்திற்கு ஒரு நாளைக்கு 40,000 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது.

“பொருளாதார நிலைமை மேம்படும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும் மற்றும் திட்டத்தை தொடர கடன்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்” என்று நிதி அமைச்சக வட்டாரம் தெரிவித்துள்ளது.

## நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டால்...

**யோ.தர்மராஜ்**

தனிப்பட்ட ரீதியில் தனக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும் நாட்டுக்காகவும் மக்களின் பாதுகாப்புக்காகவும் அரசியலமைப்புக்கு அமைய செயற்படுவேன். தனிநபரின் பாதிப்புகளை பின்னர் சரிசெய்து கொள்ளலாம். மாறாக, நாட்டுக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டால் அதனை இலகுவில் சரி செய்ய முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கோட்டே ஸ்ரீகல்யாணி சாமக்ரி தர்ம மகா சங்க சபையின் மாநாயக்க இத்தேபானே தம்மாலங்கார தேரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள நேற்றுமுன்தினம் சென்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிக்கையில்,

நீங்கள் வழங்கிய ஆலோசனைகளினாலேயே நான் இங்கு இன்று ஜனாதிபதியாக வந்துள்ளேன். பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற குழப்பத்தில் இருந்தபோது, அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, நாட்டை பற்றி சிந்திக்குமாறும் அனைவரையும் எவ்வாறு ஒன்றிணைப்பது என்பது பற்றியும் சிந்தித்து செயற்படுமாறும் நீங்கள் கூறியதையடுத்தே, இந்தப் பயணம் ஆரம்பித்தது.

பொறுப்பை ஏற்றுக்கொண்டால், அதனை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்புக்கு அமைய செயற்படுவதே பிரதமராக எனக்கிருந்த பொறுப்பாகும். என்னுடைய வீட்டை எரித்தபோது, எனக்கு எவ்வளவு பாதிப்புகள் வந்தாலும், நான் அன்று அரசியலமைப்பை பாதுகாப்பதற்காகவே செயற்பட்டேன். நான் கைவிட்டுச் சென்றிருந்தால் நாட்டில் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும்.

தனி நபரின் பாதிப்புகளை பின்னர் சரிசெய்து கொள்ளலாம். மாறாக, நாட்டுக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டால் அதனை இலகுவில் சரி செய்ய முடியாது. நாங்கள் அனைவரும் அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டே வாழ்கின்றோம். மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக நாடாளுமன்றம், ஜனாதிபதி மற்றும் நீதிமன்றம் ஆகியன செயற்படுகின்றன. யாரும் சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவதில்லை. கற்கள் எறிந்து, வீடுகளை எரித்து மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. மக்களை அச்சுறுத்தி பிரச்சினைகளை தீர்க்க முடியாது. நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்.

அதற்கு அப்பால், நாட்டிலுள்ள மக்களை எவ்வாறு வாழ வைப்பது என்பதே முக்கியமானது. எவ்வாறு உணவுகளை சேகரிப்பது, நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதை சிந்தித்தே அன்று நான் என்னுடைய பொறுப்பை நிறைவேற்றினேன். நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு சட்டம், ஒழுங்கு அவசியம். சட்டம் ஒழுங்கு என்பது அடக்குமுறையல்ல. அதனை நான் செய்யவும் மாட்டேன். நாட்டிலுள்ள ஜனநாயக சட்டத்திட்டங்களுக்கு அமையவே அனைத்தையும் முன்னெடுக்கின்றோம்.

நாங்கள் தற்போது கடினமான காலத்தில் பயணிக்கின்றோம். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நாட்டிலுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்பதே என்னுடைய நம்பிக்கையாகும். அதற்காக, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். அதன்படி, இந்த செயற்பாட்டில் இணையுமாறு அனைவருக்கும் அறிவிப்பதற்கு உங்களுக்கும் பொறுப்புள்ளது.

பிரிவினைவாத அரசியலால் அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ அழியாது. மாறாக, அரசியலமைப்பிலுள்ள ஜனநாயகமே அழிந்துபோகும். இதுவே எங்களுக்கிருக்கும் இறுதித் தருணமாகும். இதனை கருத்தில் கொண்டு நாடாளுமன்றத்தினுள்ளும் அதற்கு வெளியிலுள்ள அனைவரும் செயற்பட வேண்டியுள்ளது.

எனவே, என்னுடைய பொறுப்பை நிறைவேற்றுவேன். நாம் சரியான பாதையில் சென்றால் இன்னும் ஒன்றரை தசாப்தத்துக்குள் இதனை விட பலமிக்கதொரு நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

## கப்பலைத் தடுத்தால்...

சந்தேகக்கண்கொண்டு பார்க்கவேண்டாமென சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவர், இலங்கையின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவருடனான தொலைபேசி உரையாடலின்போது தெரிவித்திருக்கும் அதேசமயம், கப்பல் வரக்கூடாதென்பதுதான் இலங்கையின் இறுதி முடிவாக இருக்குமானால் இலங்கைக்கு உதவுவது தொடர்பில் சீனாவும் கடும் தீர்மானமொன்றை எடுக்குமென கோடி காட்டியிருக்கிறாரென அறியமுடிந்தது.

முன்னதாக அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான சீனக் கப்பலின் வருகையை உடனடியாக மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கை விடுத்த கோரிக்கைக்கு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் இன்னும் பதில் வழங்கவில்லை.

பீஜிங்குடன் ஆலோசனை நடத்தி, பதில் தருவதாக சீனத் தூதுவர், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தபோது அறிவித்துள்ளார்.

சீனாவின் இந்த உளவுக் கப்பல் அதன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் இந்தியா கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்துவரும் நிலையிலேயே இந்த நகர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னர் இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கான அனுமதியை இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபை ஆகியவை கடந்த ஜூலை 12ஆம் திகதியன்று வழங்கியுள்ளன.

கப்பல் இப்போது இந்தோனேஷியாவுக்கு அருகே நடுக்கடலில் நேரடியாக அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று தாய்வான் அருகே கப்பல் இருந்ததாக சொல்லப்பட்டது.

இந்தக் கப்பல் ஓகஸ்ட் 11முதல் 17ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவின் தொடர்ச்சியான அதிருப்திக்கு மத்தியில் இலங்கையின் வெளியுறவு அமைச்சு, சீனத் தூதரகத்துக்குக் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

அதில், யுவான் வாங் 5 கப்பல் அம்பாந்தோட்டைக்கு வரும் திகதியை மேலும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும்வரை ஒத்திவைக்க வேண்டும் என்று இராஜதந்திர விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும் மூன்றாம் ஆள் குறிப்பு மூலம் இலங்கை கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கை கிடைத்தவுடன், ஜனாதிபதி விக்ரமசிங்கவுடன் அவசர சந்திப்பு ஒன்றை சீனாவின் தூதுவர் கேட்டிருந்தார். இந்தச் சந்திப்பே நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. ஆனால் இதுவரை இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இதற்கிடையில் இலங்கை வெளிவிவகார அமைச்சரை கம்போடியாவில் சந்தித்த அமெரிக்க இந்திய வெளியுறவு அமைச்சர்கள், சீனாவின் கப்பலை இலங்கைக்குள் அனுமதித்தால் தேவையற்ற விளைவுகளை இலங்கை சந்திக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளதாக அறியமுடிந்தது.

இதேவேளை, ஆளுங்கட்சிக்குள் உள்ள சீன ஆதரவாளர்கள் பலர் இந்த விடயத்தில் கடும் விசனம் கொண்டுள்ளதுடன் சீனக்கப்பலை இலங்கைக்குள் அனுமதிக்க அரசு வழிவிட வேண்டுமென வலியுறுத்த ஆரம்பித்துள்ளதால் இன்றையதினம் கூடும் அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

## புளொட் தேசிய...

மற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 1200ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட தீர்மானங்களாவன,

கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக பல்வேறு அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் காரணமாக அமைந்த தேசிய இன முரண்பாட்டுக்கான தீர்வு குறித்த அணுகு முறையில், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி பின்வரும் விடயங்களில் உறுதி பூணுகிறது.

1. இலங்கையில் தமிழ் மக்களினது நியாயமானதும் அடிப்படையானதுமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை, ஒரு தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஷ்டி அமைப்பு முறையிலான அரசியலமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளுதல்.

2. தமிழ் மக்களின் நலன்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில், இந்த நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் எனும் அடிப்படையில், தமிழினத்தின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற, முஸ்லிம் அரசியல் சக்திகளுடனும் மலையக அரசியல் சக்திகளுடனும் இணைந்து மற்றும் எமது அபிலாஷைகளை ஏற்றுக்கொள்கின்ற சிங்கள முற்போக்கு சக்திகளின் ஆதரவுடனும், பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு எதிராக செயற்படுதல்.

3. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரும் காணப்படுகின்ற சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அரசியல் கூட்டு முன்னணி ஒன்றின் இருப்பிற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைத்தல். அத்தகையதொரு கூட்டு முன்னணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பலப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்களின் நலன்சார்ந்து இயங்கிவரும் இதர தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.

4. தென்னிலங்கை சிங்கள மக்களுடனான சமூக உடன்படிக்கையை உருவாக்கக்கூடிய புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளிலும், சாதகமான முறையில் பங்குகொள்ளும் அதேவேளையில், தற்போதைய அரசியலமைப்பில் சட்டமாக உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் முயற்சிகளுக்கு எதிராக செயற்படுவதுடன், அதனைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கும் அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்படுதல்.

5. நாட்டில் உருவாகியுள்ள பொருளாதாரச் சீரழிவுக்குப் பின்னரான பிராந்திய சர்வதேச உறவுச் சூழலில் சர்வதேசத்தின் கவனம் இலங்கையின் மீது குவிந்திருக்கும் நிலைமையை சாதகமாகக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை பெறுவதற்காக முயற்சித்தல்.

6. இறுதி யுத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட, மனித குலத்தால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத போர்க்குற்ற நடவடிக்கைகள் குறித்த பொறுப்புக்கூறல்கள் சம்பந்தமாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய அழுத்தங்களை இலங்கை அரசுக்கு வழங்க தமிழ் மக்களின் நீண்டகால நலன்களில் அக்கறை கொண்டுள்ள அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்படுதல்.

7. உயிரிழந்த தமது உறவினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களை தாம் விரும்பிய நாளில் விரும்பிய இடத்தில் அஞ்சலி செய்யும் மரபை எவ்வித இடையூறுகளோ அச்சுறுத்தல்களோ இன்றி தொடர்ச்சியாக கடைப்பிடிக்க தேவையான சூழலை ஏற்படுத்துதல்.

8. அபிவிருத்தி எனும் போர்வையில், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்குடன், தமிழர் தாயகத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களாகவுள்ள மகாவலி அதிகாரசபை, தொல்லியல் திணைக்களம், வனத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

9. தேசிய இன விடுதலைப்போரின் பெயரால் சிறைகளிலும், புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பை வழங்கி அவர்களை விடுதலை செய்யும் வகையிலான அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தல்.

10. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடைய நீதி கோரிய போராட்டத்திற்கான ஆக்கபூர்வமான தீர்வினை பெற்றுக்கொள்ள, சம்பந்தப்பட்ட சகல தரப்புகள் மீதும் அழுத்தங்கள் வழங்குதல் மற்றும் சம்பவங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

11. அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாட்சி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதை நிராகரிப்பதோடு, படைத்தரப்புகளுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கருத்து வெளிப்பாடுகளையும் முடக்க முற்படுவதை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

12. அனைத்து இயக்கங்களினதும் முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவரும் மீண்டும் சமூகத்தில் கௌரவத்துடனும், தன்னம்பிக்கையுடனும் ஒன்றித்து வாழக்கூடிய வகையில், அவர்களது சமூக பொருளாதார வாழ்வை வளப்படுத்துவதற்கான உதவிகளை அரச நிறுவனங்களிடமிருந்தும் புலம்பெயர் தமிழ் சமூகத்திடமிருந்தும் சாத்தியமான அனைத்து தரப்பினிடமிருந்தும் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

13. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நிர்வாக அலகுகளில் அவர்களது இன விகிதாசாரத்தை குறைத்து, சமூகப் பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்தும் வகையிலான எல்லை மாற்றங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

14. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து துறைகளில், அதிகாரப்பகிர்வுத் தத்துவத்திற்கு முரண்பட்ட வகையிலான மத்திய அரசுத் தலையீடுகளை தடுக்கவும், தொடர்ச்சியாக பாதிப்படைந்துவரும் வறிய, பின் தங்கிய, தொலைதூரக் கிராமங்களில் கல்வி வளர்ச்சியையும் சுகாதார மேம்பாட்டினையும் போக்குவரத்து வசதி வாய்ப்புகளையும் உறுதிபடுத்தக்கூடிய நிர்வாகமுறை மாற்றங்களை சட்டமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

15. தேசிய ரீதியாகவும் பாரம்பரிய ரீதியாகவும் முன்னெடுக்கக்கூடிய தொழிற்றுறைகள் மற்றும் தொழில் முயற்சிகள் உருவாக்கப்பட்டு அதிக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

16. வடக்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்து அனைத்துக் காலத்துக்குமான பொருளாதார அழிவை ஏற்படுத்துகின்ற இந்திய மீன்பிடிப் படகுகள் விடயத்தில் என்றென்றும் எமது ஆதரவு சக்தியாகவும் மிக நெருங்கிய உறவாகவும் விளங்கும் தமிழக மக்களுடனான நீண்டகால உறவுகள் பாதிக்கப்படாத வகையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை ஆக்கபூர்வமான வழிகளில் அரசுகள் மட்டத்திலும் மீனவ சமூகங்கள் மட்டத்திலும் இயன்றளவு விரைவாக செயற்படுத்தல்.

17. விவசாயிகளின் ஒத்துழைப்புடன், போதிய காலஅவகாசத்துடன் இரசாயனப் பசளைகளின் பயன்பாடு குறைக்கப்பட்டு நஞ்சற்ற விவசாய உற்பத்திகள் ஊக்கப்படுத்தல் மற்றும் எத்தகைய பொருளாதார நெருக்கடியிலும் உணவுப் பஞ்சத்திலிருந்து விடுபட்டு வாழும் வகையில் தற்சார்புப் பொருளாதார அம்சங்களை ஊக்குவித்து உற்பத்திகளை பெருக்க கிராம அமைப்புகளுடன் இணைந்து செயற்படுதல் அல்லது ஆதரவை வழங்குதல்.

18. வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மேய்ச்சல் தரைகளையும் பாதுகாத்துக் கொள்ளுதல் மற்றும் வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களில் புதிய மேய்ச்சல் தரைகளை உருவாக்கி விலங்கு வேளாண்மையை பாதுகாத்து அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்.

19. சுதேச பொருளாதார மூலங்களாக திகழும் பனை, தென்னை வளங்களைப் பாதுகாத்தல் ஆய்வுக்குட்படுத்தல், மேம்படுத்தல், வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான செயற்றிட்டங்களை மேம்படுத்தல்.

20. சூரிய ஒளி மற்றும் காற்றாலை மூலமான மின்சார உற்பத்தி முறையினை ஊக்குவிக்கவும் பயன்படுத்தவும் கூடிய அரச தனியார் செயற்றிட்டங்களுக்கு பொதுமக்களின் பொருளாதார, சமூக நலன்களுக்கு கேடு ஏற்படாத வகையில் ஆதரவு வழங்குதல்.

21. எமது சந்ததிகளின் எதிர்காலத்துக்கு பிரதான எதிரியாக மாறிவரும் பொலித்தீனின் பாவனை அற்ற சமூகமாக எம்மை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதோடு நிலத்தடி நீர் மாசடையும் காரணிகளை இனம் கண்டு அவற்றிற்கு முற்றாக தடை விதிக்கும் பொறிமுறைகளையும் நிர்வாக முறைமைகளையும் சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

# ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்

## இத்தேபான தம்மாலங்கார தேரர் வலியுறுத்து

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு மக்களும் உதவ வேண்டும் - என்று கோட்டை ஸ்ரீ களனி விகாரையின் சாமத ஸ்ரீ தர்ம மா சங்க சபையின் தலைவர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (06) இந்தேபான தம்மாலங்கார தேரரை சந்தித்துள்ளார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ருக்மலே தர்மவிஜயாலோக விகாரைக்கு வருகை தந்திருந்தார். இதன்போது சமய வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, பின்னர் கோட்டை ஸ்ரீ களனி விகாரையின் சாமத ஸ்ரீ தர்ம மா சங்க சபையின் தலைவர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார தேரரை



சந்தித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழும்புவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து வழங்கக்கூடிய அதிகபட்ச உதவியை வழங்க வேண்டும். ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் எதிர்காலத்துக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுவாக தற்போதைய காலகட்டத்தில், அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் எதிர்காலத்துக்காக ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடமை சகல அரசியல் கட்சிகளினதும் தலைவர்களுக்கும் இருக்கின்றது. ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

அவ்வாறாயின், இந்த வருடத்தின் இறுதியில் மகிழச்சியடையக்கூடியதாக இருக்கும். அதேபோன்று முன்னாள் ஜனாதிபதியால் நாட்டுக்கு எந்தவித சேதமும் இல்லை. அவர் நாட்டின் சிரேஷ்ட தலைவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மஸ்கெலியா – மவுசாக்கலை தோட்ட தொடர் குடியிருப்பொன்றில் வெடிப்பு



(க.கிஷாந்தன்)



நாட்டில் கடந்த நாட்களில் பெய்த கடும் மழை காரணமாக மலையகத்தின் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், மஸ்கெலிய பிரதேச சபைக்குட்பட்ட மவுசாக்கலை தோட்டத்தில் காணப்படும் தொழிலாளர் தொடர் குடியிருப்பொன்றில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர் குடியிருப்பில் காணப்படும் ஒரு வீட்டின் சுவர் மற்றும் நிலம் வெடித்துள்ளதுடன், குறித்த வீட்டின் சமையலறை மற்றும் ஏனைய இரண்டு வீட்டின் சமையல் அறைகளிலும் வெடிப்பு ஏற்பட்டு நிலம் தாழிறங்கியுள்ளது.

இந்த நிலம் தாழிறங்கியுள்ள இடத்திற்கு கீழ்ப் பகுதியில் 12 அறைகளைக்கொண்ட தொடர் குடியிருப்பொன்று காணப்படுவதுடன், வெடிப்பு ஏற்பட்ட நிலம் தாழிறங்கினால் கீழ்ப் பகுதியில் காணப்படும் தொடர் குடியிருப்பும் முழுமையாக பாதிக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக குறித்த பகுதிக்கான கிராம உத்தியோகத்தரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வினவியபோது இவ்விடயம் தொடர்பில் நிறுவனத்திற்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாரிய பாதிப்பு ஏற்பட முன் உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நவகமுவ பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் நபரொருவர் பலி!

நவகமுவ பொலிஸ் நிலையத்தில் சிறியளவான முறைப்பாட்டுப் பிரிவில் முறைப்பாடொன்று விசாரணை செய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் நபரொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஜயந்த பெரேரா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். முறைப்பாடு செய்த பெண்ணுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபர் நேற்று நவகமுவ பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, முறைப்பாடு செய்வதற்காக குறித்த பெண்ணுடன் வருகைதந்திருந்த காதல் கணவரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் பின்புறத்தில் பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், நவகமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# கற்பிட்டி தலவில ஆலயத்தின் வருடாந்த திருவிழா

(ரஸீன் ரஸ்மின்)

சிலாபம் மறை மாவட்டத்திற்குட்பட்ட கற்பிட்டி தலவில புனித அன்னம்மாள் பரிசுத்த





தலத்தின் 260ஆவது வருடாந்த திருவிழா நேற்று (07) இடம்பெற்றது. சிலாபம் மறை மாவட்ட ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை தலைமையில் புனித அன்னம்மாள் பரிசுத்த தலத்தின் 260ஆவது திருநாள் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது.

கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான புனித அன்னம்மாள் பரிசுத்த தலத்தின் 260ஆவது வருடாந்த திருவிழாவில் தினந்தோறும் மாலை ஆராதனைகள் இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றது.

அத்துடன், நேற்றுக் காலை 7.00 மணியளவில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை புனித அன்னம்மாள் பரிசுத்த தலத்தின் 260ஆவது திருநாள் கூட்டுத் திருப்பலியை தமிழிலும் சிங்களத்திலும் ஒப்புக்கொடுத்தார்.

அத்தோடு, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நீங்கவும், மக்கள் நல்லிணக்கத்தோடு ஒற்றுமையாக வாழவேண்டும் எனவும் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை இதன்போது விசேட பிரார்த்தனை செய்தார். இதனையடுத்து, புனித அன்னம்மாளின் திருச்சொரூப பவனி வெளி வீதி வலம் வந்தது.

மேற்படி தலவில புனித அன்னம்மாள் பரிசுத்த தலத்தின் திருவிழாவில் கலந்துகொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்துகொண்டனர். இதேவேளை, தலவில புனித அன்னம்மாள் பரிசுத்த தலத்திற்கு பக்தர்கள் வருவதற்கும், பின்னர் அங்கிருந்து செல்வதற்குமென பாலாவி தொடக்கம் கற்பிட்டி தலவில வரைக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் பகல், இரவு நேரங்களில் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு - புத்தளம் புகையிரத மார்க்கம் ஊடாக புத்தளம் பாலாவிக்கு புகையிரதத்தில் வரும் பக்தர்களுக்காகவே இவ்வாறு இ.போ.ச. பஸ்கள் பாலாவி புகையிரத நிலையத்தில் இருந்து சேவைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் இடம்பெற்ற 36ஆவது இஸ்லாமிய புது வருட முஹர்ரம் நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிக் கல்வி நிலையம் ஏற்பாடுசெய்த 36ஆவது இஸ்லாமிய புது வருடமான முஹர்ரம் நிகழ்வு நேற்று (07) தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் அஹதிய்யாவின் அதிபர் சிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் கலந்துகொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக பொரளை அஹதிய்யாவின் பொருளாளர் அலவி முக்தார், இளைஞர் நாடாளுமன்ற பிரதி அமைச்சர் அஹமத் சித்தீக், மௌலவி மபாஸ், முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அஹமட் முனவ்வர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது விசேட முஹர்ரம் உரையை மௌலவி மபாஸ் வழங்கியதுடன், மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வுகளும் தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதுடன் வருமானம் குறைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு உலருணவுப் பொதிகளும் அஹதிய்யாவின் ஏற்பாட்டில் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இதன்போது மாணவர்களின் பேச்சு, ஹஸீதா, இஸ்லாமிய கீத நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், அதிதிகளுக்கு அஹதிய்யாவின் அதிபரால் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.





அஹதிய்யாவின் பிரதி அதிபரும் ஊடகவியலாளருமான ருசைக் பாறுக் மற்றும் ஊடகவியலாளர் ஏ.எஸ்.எம்.ஜாவித் ஆகியோர் அஹதிய்யாவுக்கு பங்களிப்புச் செய்தமைக்காக நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை நீக்கிவிட்டு, அரசாங்கத்தை கவிழ்க்க அரச புலனாய்வு சேவை உள்ளிட்ட புலனாய்வு சேவைகள் நடவடிக்கை எடுத்தனவோ என்ற சந்தேகம் இருப்பதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் தெரியப்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பொது பாதுகாப்பு சம்பந்தமாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் அமைச்சர் டிரான் அலஸ் சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதியை பதவியிலிருந்து அப்புறப்படுத்த கொழும்புக்கு 15 ஆயிரம் பேரே வருவார்கள் என புலனாய்வுப் பிரிவுகள் அறிவித்திருந்ததாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அதனைவிட அதிகளவானவர்கள் கொழும்புக்கு வந்தனர் எனவும், பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு வழங்கிய புலனாய்வு அறிக்கைகள் குறித்து பாதுகாப்பு சபையில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அமைச்சர் டிரான் அலஸ், விடயத்தை தெளிவுபடுத்த முயற்சித்தபோதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு இடமளிக்காது, இந்த விடயம் தொடர்பாக கட்டாயம் விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ இந்தக் கலந்துரையாடலின்போது, அமைச்சர் டிரான் அலஸுடன் கருத்து முரண்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஆளும் கட்சியின் அடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கட்டாயம் கலந்துரையாட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். இதன் காரணமாக பொலிஸ் மா அதிபரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, புலனாய்வு சேவைகளை மறுசீரமைக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஓகஸ்ட் 08ஆம் திகதி, திங்கட்கிழமை

# பாதுகாப்புத்துறையினருடன் முரண்படும் அரசியல்வாதிகள்!

அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனரென சொல்லப்படுகிறது.

இந்த விடயங்களை நோக்கும்போது அரசியல்வாதிகள் விட்ட தவறுகளையெல்லாம் பாதுகாப்புத்துறையினர் மீது சுமத்தும் செயற்பாடு ஆரம்பமாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற முன்னர் அந்த அச்சுறுத்தல் தொடர்பில் பாதுகாப்புத்துறையினர் அரசியல் உயர்மட்டங்களுக்கு பல தடவைகள் அறிவுறுத்தியிருந்தனர் அல்லவா? அப்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதை புறந்தள்ளி செயற்பட்ட அரசியல்வாதிகள் தொடர்பில் இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? மாறாக, அந்தத் தாக்குதல் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த பாதுகாப்புத்துறை அதிகாரிகளே விசாரணை கெடுபிடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.

அதேபோல், ஜூலை 9ஆம் திகதி கோட்டாபயவுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கவில்லையென இப்போது பாதுகாப்புத்துறையினருக்கு எதிராக குரல்கள் எழும்பியிருக்கின்றன. மே 9ஆம் திகதியும் ஜூலை 9ஆம் திகதியும் இடம்பெற்ற மக்கள் எதிர்ப்பு, திட்டமிட்ட எதிர்ப்பு அல்ல. அவை பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விசனங்களே. இவ்வாறான மக்கள் கிளர்ச்சி வருமென புலனாய்வுத்துறையினர் பல தடவைகள் எச்சரித்திருந்த போதும் அவற்றை அரசியல்வாதிகள் கண்டுகொள்ளவில்லை. மாறாக, காகமொன்றை அடித்து தொங்கவிட்டால் எல்லாம் சரியாகிவிடும், அடங்கிவிடும் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பகிரங்கமாக கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை பாதுகாப்புத்துறையில் பெரும் அரசியல் தலையீடுகள் இருப்பதே இந்த நிலைமைகளுக்குக் காரணம். இதர நாடுகளைப்போன்று ஆட்சிமாற்றம் நடக்கும்போதெல்லாம் பாதுகாப்புத்துறையில் மாற்றம் செய்யப்படக்கூடாதென்ற எழுதப்படாத சட்டம் இங்கும் இருக்கவேண்டும். எமது அண்மைய நாடான இந்தியாவில் கூட ஆட்சிமாற்றம் நடக்கும்போது பாதுகாப்புத்துறையின் கட்டமைப்பு பெரிய மாற்றங்களை சந்திக்காது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாதுகாப்புத்துறை, உளவுத்துறைகளை தங்களது தேவைக்கு பயன்படுத்திவிட்டு, தங்களுக்கெதிராக ஒரு சிறு கீறல் விழுந்தாலும்கூட அவற்றை பாதுகாப்புத்துறையினர்மீது சுமத்தும் அரசியல்வாதிகளின் கைங்கரியம் இனியும் தொடரக்கூடாது.

பாதுகாப்புத்துறையின் உயர் அதிகாரிகள் அரசியல்வாதிகளின் கையாட்களாக மாறாமல் இருந்தால் அதனைச் செய்யலாம். அதுவே இப்போதைய தேவை.



# பணிப்பகிர்வு கலை அறிவோம்!

நாம் சந்திக்கும் பலரும் எப்போதும் பணிச்சுமையுடனேயே இருப்பர். ஒருவருக்கு பணி சுமையானதாகவோ, சுகமானதாகவோ இருக்கலாம். அது அவர் தனது வாய்ப்புகளை எவ்வளவு தூரம் நேர்த்தியாகப் பயன்படுத்துகிறார் என்பதைப் பொறுத்தே அமைகிறது. பணிகளைப் பகிரும் வழக்கமுள்ள குடும்பங்களில் பெரும்பாலும் மகிழ்ச்சியே நிலவும். ஆனால், எப்படி பணிகளைப் பகிர்வது?

பணிப்பகிர்வு என்பது ஒரு கலை. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தமது கால அட்டவணைப்படி மட்டும் பணிகளை மேற்கொண்டால் இது நடக்காது. மாறாக, குடும்பப் பணிகளுக்கான கால அட்டவணையையும் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இதில் சிறியவர், பெரியவர் அனைவரும் வாய்ப்புக்கேற்ற பணிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

குடும்பத்தில் எந்தெந்த பணிகள் எந்தெந்த நேரத்தில் நடக்கவேண்டும் என்ற புரிதல் வேண்டும். பல பணிகளை தனி ஒருவர் செய்யும்போதும் அவருக்கு ஏற்படும் மனச்சோர்வையும் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்ளும்போதே குடும்பப் பணிகள் குறிப்பிட்ட நேரத்தில் வெற்றிகரமாக நிகழ்ந்தேற உதவும்.

ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பை இது தருவதோடு பரஸ்பரம் அன்பையும் கூட்டும். இவ்வாறு அனைத்துப் பணிகளையும் பலரும் பகிர்ந்துகொள்வது குடும்ப ஜனநாயகத்தை ஊக்குவித்து மகிழ்வை உறுதிசெய்யும். குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வையும் உறுதிப்படுத்தும்.

அடுத்ததாக அலுவலகங்கள். பெரும்பாலான அலுவலகங்களில் தேவைக்கேற்ப ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் தங்களுக்கான பணியை செய்து முடித்தவர்கள், அடுத்த கட்டத்தில் இருப்போருக்கு விட்டுக்கொடுத்தால் அவரும் விரைவில் பணியாற்றி முடித்தால் பணிகள் நிறைவேறும்.

மாறாக, ஒவ்வொரு இடத்திலும் பணிகள் நிறைவேற காலதாமதம் ஆக ஆக எல்லா இடத்திலும் பணிகள் அளவுக்கதிகமாக தேக்கமடையவே செய்யும். நாட்கள், வாரங்கள் என பணிகள் குவியும்போது பணிச்சுமை கூடிவிடுகிறது.



வார இறுதி நாட்களிலும் வீடுகளுக்கு கோப்புகளைக் கொண்டுசென்று பணிகளை பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த இடத்தில்தான் அலுவலக மேலாளரின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. பணியாளர்களின் பலம் அறிந்து பணிப்பிரிவை செய்யவேண்டும். யாருக்கு எது விருப்பமான பணி என்பதை அறிந்து அவ்வகைப் பணியை அவரிடம் ஒப்படைக்கும்போது அப்பணி சிறப்பாக நடைபெறும்.

அவ்வாறு ஒருவரிடம் ஒரு பணியை ஒப்படைக்கும்போதே, அலுவலகத்தில் நடைபெறும் அனைத்துப் பணிகள் குறித்தும் அனைவருக்கும் புரிதலை ஏற்படுத்தவும் வேண்டும். சில நேரம் சில பணியாளர்கள் விடுமுறையில் சென்றால் கூட பணிகள் தொய்வின்றி நடைபெற இது உதவும். இன்றும் சில சர்வதேச நிறுவனங்கள், தம் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் விடுமுறை அளித்து நிறுவனங்களின் கூட்டுச் செயல்பாட்டை உறுதி செய்கின்றன.

குறைவான ஊழியர்களோடு இயங்கும் அலுவலகங்கள், வங்கிகள் போன்றவை எப்போதும் பணிச்சுமையுடனேயே இயங்குவது இயல்பு. இதில் கூடுதலாக விவரம் கேட்பதற்காக பொதுமக்களோடு நேரம் செலவழிக்கும் நிலை ஏற்பட்டால் அதற்கே நேரம் சரியாக இருக்கும். வாய்ப்பிருப்பின் வாயிற்காப்பாளர் போன்றோரை இதற்கு தயார்ப்படுத்தலாம். ஒருவர் உள்ளே நுழையும்போதே அவர் எதற்காக வருகிறார், அப்பணிக்கு உரிய அலுவலகம் இதுதானா, அவர் நாடிவரும் பணி தற்போது நடக்க வாய்ப்புள்ளதா என்பதையெல்லாம் கேட்டு தெளிவுபடுத்திக்கொண்டு அவரை உள்ளே அனுமதிக்கலாம்.

இப்படி வீட்டிலிருந்து அலுவலகம் வரை பணிப்பகிர்வும் செயலூக்கமும் பெறும்போது மக்களின் தேவைகள் குறித்த நேரத்தில் நிறைவேறுவதோடு பலருக்கும் குறிப்பிட்ட அளவு ஓய்வெடுக்கும் நேரமும் உறுதியாகும். இவ்வாறான ஓய்வை பயனுள்ள வகையில் செலவழித்துப் புத்துணர்ச்சியும் பெறலாம்.

பணிச்சுமையோடிருக்கும் நிலையே பல இடங்களில் நிலவுவது நல்லதல்ல. வாழ்க்கை என்பது வெறுப்பையும் கோபத்தையும் வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்பன்று. மாறாக, அன்பையும் பரிவையும் பரிமாற்றக் கிடைத்த அற்புத வாய்ப்பு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நாளின் தவறு அடுத்த நாளில் தொடராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

யார் உயர் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் நிறுவனம் வெற்றி பெறும்போது பாராட்டு கிடைக்கும். தாம் பாராட்டப்படும்போது உடனிருப்போர் மகிழ அவர்களுக்கான பாராட்டையும் உயர் பொறுப்பில் உள்ளோர் ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது, அனைவருடைய பலவீனத்தையும் பலமாக மாற்றும் கலையை உயர் பொறுப்பிலுள்ளோர் கற்கவேண்டும். தன்னுடன் பணிபுரிவோர் திறன் மிக்கோராக தம்மை மேம்படுத்திக்கொள்ள எடுத்துக்கொள்ளும் காலம் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நிறுவனம் வெற்றிபெறும்.

இதனை மனதிற்கொண்டு ஒவ்வொரு நாளின் செயல்திட்டத்தையும் வகுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தனது இலக்கை அடைய தமது அனுபவப் பாடங்களை உயர் பொறுப்பில் உள்ளோர் பகிரலாம். வாய்ப்பிருப்பின், ஒவ்வொரு நாள் காலையிலும் அலுவலகத்தில் நல்ல சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளும் ஏற்பாட்டை செய்யலாம். ஒருவர் மனதில் நல்லவை நிறைந்தால் அல்லவை அகலும்.

இன்றைக்கிருக்கும் சமூக இயங்கியலை நாளை காண இயலாது என்ற வகையில் சமூகம் மாறிவருகிறது. இதில் தொழில்நுட்பத்தின் பங்கு மறுக்க இயலாததாகிறது. தொழில்நுட்பத்தின் வரவு பணிகளை எளிமையாக்கிவிட்டது. ஆனால், அவ்வாறு எளிமைப்படுவதற்கு நாம் மாறி வரும் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொண்டு நமது பங்களிப்பை செய்ய முன்வரவேண்டும்.

பணிகளைப் பகிர்ந்து செய்வதற்கான செயலறிவை முதலில் நிறுவனத் தலைவர்கள் பெறவேண்டியது அவசியமாகும். வளரும் தொழில் நுட்பங்களை அவர்கள் கையாள்வதோடு, உடன் பணியாற்றுவோருக்கும் கற்றுத்தர வேண்டும். மக்கள் தொகை பெருகிவரும் இன்றைய காலகட்டத்தில், சமூகத்தின் தேவையை நிறைவுசெய்ய தொழில்நுட்பத்தின் பங்கை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசர அவசியம்.

**முனைவர் என். மாதவன்**
**நன்றி - தினமணி**

## நக்கல் நமசிவாயம்

**நீதிமன்றத்துக்குள்ள துப்பாக்கிச் சூடு, பொலிஸ் நிலையத்துக்குள்ள கத்திக்குத்து எண்டு சம்பவங்களுக்கு ஒண்டும் குறைச்சல் இல்ல பாருங்கோ...**



## இன்றைய நாளில்...

**✱ 1509 – கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசராக சித்தூரில் முடிசூடினார். இவரது ஆட்சிக்காலமே பேரரசின் மிக உயர்ந்த நிலையாகக் கருதப்படுகிறது.**

**✱ 1648 – முதலாம் இப்ராகிமுக்குப் பின்னர் உதுமானியப் பேரரசராக நான்காம் மெகுமெது முடி சூடினார்.**

**✱ 1848 – மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.**

**✱ 1876 – தோமஸ் ஆல்வா எடிசன் மிமியோகிராஃப் என்ற பதிவு செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.**

**✱ 1908 – வில்பர் ரைட் தனது முதலாவது வான்பயணத்தை பிரான்ஸில் "லெ மான்ஸ்" என்ற இடத்தில் மேற்கொண்டார். இதுவே ரைட் சகோதரர்களின் முதலாவது வான் பயணமாகும்.**

**✱ 1942 – இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் கூட்டிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.**

**✱ 1947 – பாகிஸ்தானின் தேசியக் கொடி அங்கீகரிக்கப்பட்டது.**

**✱ 1967 – தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) அமைப்பு இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகியன இணைந்து உருவாக்கப்பட்டது.**

**✱ 1989 – ஓர் இரகசிய இராணுவ விண்வெளித் திட்டத்தை முன்னெடுத்து நாசா கொலம்பியா விண்ணோடத்தை விண்ணுக்கு அனுப்பியது.**

**✱ 1990 – ஈராக் குவைட்டை கைப்பற்றி அதனைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. சில நாட்களில் வளைகுடா போர் ஆரம்பமானது.**

**✱ 1991 – அக்காலத்தில் மிக உயர்ந்த அமைப்பு வார்சாவா வானொலித் தொலைத்தொடர்பு கோபுரம் இடிந்து வீழ்ந்தது.**

**✱ 1992 – யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதி கொப்பேகடுவ கொல்லப்பட்டார்.**

**✱ 2006 – திருகோணமலைக்கு வடக்கே வெல்வெறிப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.**


# உள்ளதைக் காட்டும் ஸ்ரிக்கர்

உடற்பயிற்சி செய்பவரின் தசைகள் எப்படி இருக்கின்றன என்பதை நேரலை காட்சியாக பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும்? தாயின் வயிற்றில் குழந்தை வளர்வதை நேரடியாக மருத்துவரால் பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும்?

இதற்கெல்லாம் உதவும் ஒரு கருவியை அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். அல்ட்ரா சவுண்ட் ஸ்ரிக்கர் எனப்படும் அந்த சிறிய கருவியை உடல் மீது வைத்தால், 48 மணிநேரத்திற்கு உள்ளிருக்கும் பாகங்களை அப்படியே வெளியே காட்டும்.

தோலைத் தாண்டி, செவி உணரா ஒலி அலைகளை உடலுக்குள் அனுப்பி, அதை திரும்பப் பெறும் நூற்றுக்கணக்கான டிரான்ஸ்டியூசர்கள் இந்த ஸ்ரிக்கரில் உள்ளன. உடலோடு ஒட்டுவதற்கேற்ற எலாஸ்டோமர் பட்டியும், அதன் மேல் ஹைட்ரோஜெல் பசையும் இருக்கின்றன.

ஸ்டிக்கரிலுள்ள மீஒலி டிரான்ஸ்டியூசர்கள் உடலின் உள்ளுறுப்புகளை துல்லிமாக படம்பிடித்து வெளியே உள்ள திரையில் காட்டும். இக்கருவி வயர்கள் இணைப்பின் மூலமே செயல்படுகிறது. விரைவில், கம்பியின்றி, தொலைவிலுள்ள




மருத்துவரும் உறுப்புகளை பார்க்கும் வசதி வந்துவிடும் என எம்.ஐ.டி. விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆர்ப்பாட்டக்காரர்களின் உண்மையான அபிலாஷைகளை வென்றெடுக்க மோசமானதை கைவிட்டு நல்ல நோக்கங்களுடன் ஒன்றிணைவோம்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை





**அரசியல் சட்டத்துக்கு விரோதமான, பயங்கரவாதத்தை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் - கலாநிதி ஓமல்பே சோபித தேரர்**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் உண்மையான அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு, அதன் மோசமான பக்கங்களைக் களைந்து, நல்ல இலக்குகளுடன் மீண்டும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான ஆலோசனை தொடர்பில் தென்னிலங்கை பிரதம சங்கநாயக வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்ட மக்கள் பேரவையுடன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் பல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் கலந்துரையாடியதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி விக்ரமசிங்க, 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீளக்கொண்டுவருவது மற்றும் நாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பொருளாதார சீர்த்திருத்தங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதை நினைவுகூர்ந்தார்.

தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சில கட்சிகளுடன் மாத்திரமே பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு குழுவினர் அல்ல. பல குழுக்கள். இவர்கள் அனைவரும் எனக்கு எதிரானவர்கள் அல்ல. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினர் இன்றும் வந்து கலந்துரையாடினர். அனைத்து அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களும் எங்களுடன் கலந்துரையாடுகிறார்கள். எதிரானவர்கள் இருக்கலாம். ஆனால் எல்லோரும் எங்களுக்கு எதிரானவர்கள் அல்ல.

அவர்கள் மிகவும் ஆக்கபூர்வமானவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நான் அதை பாராட்டுகிறேன். ஆனால் சில நேரங்களில் ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியது. நாம் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும், என்னுடன் காலையில் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் வன்முறையால் போராட்டத்தை விட்டு வெளியேறினர் என்று கூறினார்கள். பல்வேறு அமைப்புகள் இதனைக் கூறுகின்றன.

ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து செய்த செயலை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அது கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்டதொன்றல்ல. அது எங்களின் பொதுச் சொத்து. அங்கே தொலைந்துபோன சில விஷயங்கள் மீண்டும் கிடைக்காது. ஜனாதிபதி மாளிகையும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளில், அலரிமாளிகையும் அவர்களின் கைகளில், இறுதியாக பிரதமர் அலுவலகம் வரை அது சென்றது. அரசாங்கத்தை எப்படி நடத்துவது. என் வீடு தீப்பிடித்து எரிந்ததுடன் அது முடிந்தது. அதையும் நாம் கண்டிக்க வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் யாரும் அதனைக் கண்டிக்கவில்லை.

அடுத்து இவர்கள் நாடாளுமன்றத்திற்கு வர முயற்சித்தனர். அங்கு வந்ததும், நான் துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டாம் என்று கூறினேன். பின்னர் பிரதமர் அலுவலகத்துக்கு வந்தனர். அங்கேயும் சுட வேண்டாம் என்றேன். மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த பாதுகாப்புப் படையினரிடம் உரிய நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். நாடாளுமன்றத்தைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. அவர்கள் என் மீது கோபப்படலாம். ஆனால் எம்முடன் கலந்துரையாடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிர்காலம் ஒன்றை வழங்க வேண்டும். அவர்கள்தான் சிஸ்டம் சேன்ஜ் பற்றி பேசுகிறார்கள். அவர்களை நாம் பாராட்டுகிறோம். இப்போது நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

சட்டத்தை மீறியவர்களையும் ஏனையவர்களையும் இப்போது எப்படி தேர்ந்தெடுப்பது? இங்கு ஒரு சிக்கல் உள்ளது. ஜோசப் ஸ்டாலின் கைது தொடர்பாக இருப்பது ஒரு சட்டரீதியான நடவடிக்கை ஆகும். நான் அவருடன் உரையாடினேன். போராட்டத்தால் நல்ல விடயங்களும் நடந்தன. மோசமான விடயங்களும் நடந்தன. நல்லதை மட்டும் வைத்துக்கொண்டு கெட்ட பக்கத்தை தள்ளி வைப்போம். சட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டிருப்பின் கலந்துரையாடி அதனைத் தீர்த்துக்கொள்வோம்'' என்றார்.

மேலும், இங்கு உரையாற்றிய தென்னிலங்கையின் பிரதம சங்கநாயக்கர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர்,

''நாடாளுமன்றத்தில் நீங்கள் ஆற்றிய உரை மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. மகாஜன சபையினால் முன்வைக்கப்பட்ட செங்கடகல அறிக்கையுடன் நீங்கள் முழுமையாக உடன்படுவதால் அதன் முக்கியத்துவம் தெளிவாகத் தெரிகிறது. நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய பின்னரே உலக நாடுகளின் ஆதரவு எமக்கு கிடைக்கும். அது தான் உண்மை. அதுவே நமது பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீள வழி. அரசியல் ஸ்திரத்தன்மைக்காக நீங்கள் முன்வைக்கும் சர்வகட்சி வேலைத்திட்டம் தான் செங்கடகல பிரகடனத்திலும் அடங்கியுள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்க நீங்கள் நேர்மையுடன் முயற்சி எடுப்பீர்கள் என மக்கள் நம்புகின்றனர். மேலும் அனைத்து அரசியல் கட்சிகளும் உங்களோடு இணைந்து இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே எதிர்பார்க்கின்றனர்.

சட்டவிரோதமான, அரசியலமைப்புக்கு விரோதமான, குண்டர் பயங்கரவாத செயல்களை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இந்த கொடூரமான பயங்கரவாத செயல்களை நாங்கள் நிராகரிக்கிறோம். ஆனால் அமைதியான மக்கள் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாததாலேயே நடத்தப்பட்டன. அது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டத்தில் பொதுமக்களை இணைத்துக்கொள்ள வேண்டும். அனைத்துக் கட்சி ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட நீங்கள் நாட்டில் செயல்படுத்த எதிர்பார்க்கும் அமைதியான வேலைத்திட்டத்தில் இணைய நாங்கள் தயாராக உள்ளோம். நாம் கலந்துரையாடுவோம்''.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்,

''நாங்கள் எல்லாவற்றையும் சட்டப்படி செய்கிறோம். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை அமைதிக் குழுக்கள், வன்முறைக் குழுக்கள் என்று கோடிட்டு பிரிக்க முடியாது. ஆனால், கைது செய்யப்பட்டவர்களில் யாரேனும் ஒருவர் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டதாக ஆதாரத்துடன் நிரூபித்தால் அது தொடர்பில் செயற்பட முடியும்''.

அங்கு கருத்துத் தெரிவித்த சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ்,

''இந்த துரதிர்ஷ்டமான நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பங்களிப்பு வழங்க முடியும் என்பதை எதிரான குழுக்கள் கூட இன்று ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்த நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் நாம் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்க முடியாது. இப்படி தொடர்ந்தும் போராடும் சூழ்நிலை இன்று நாட்டில் இல்லை. நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாங்கள் எதிரானவர்களும் அல்ல எதிரிகளும் அல்ல. நாம் ஒன்றுபட்டு நாட்டுக்காக உழைக்கலாம்'' - என்றார்.

## ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரிடமிருந்து ஜனாதிபதிக்கு வாழ்த்து





ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ்(Antonio Guterres) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என பொதுச் செயலாளர் அண்மையில் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான தேசிய மூலோபாயத்தை வகுப்பதில் அனைத்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை ஐ.நா. பொதுச்செயலாளர் ஒப்புக்கொண்டுள்ளதோடு, அவ்வாறு செய்யும்போது பொதுமக்களுடன் கலந்தாலோசித்தல், சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் உட்பட அனைத்து தரப்பினருக்கு மிடையில் கலந்துரையாடலை ஊக்குவிப்பதன் முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பெண்களின் அரசியல் பங்கேற்புக்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதிலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நிலையான அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பை தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.எம்.எவ். பேச்சுவார்த்தைகள் - கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்பார்ப்பு

### ஜனாதிபதிக்கான வாழ்த்துச் செய்தியில் ஜப்பான் பிரதமர் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜப்பானிய பிரதமர் பூமியோ கிசிடா Fumio Kishidaதனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கான விசேட வாழ்த்துச் செய்தியொன்றை விடுத்துள்ள ஜப்பானிய பிரதமர், ஜப்பானிய மக்களினதும் அரசாங்கத்தினதும் வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை வெளியிட்டுள்ள ஜப்பானிய பிரதமர், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மூலம் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மிக விரைவில் முடிவுக்கு வரும் என நம்பிக்கை தெரிவித்த ஜப்பானிய பிரதமர், இந்து சமுத்திரத்தில் சேவை மையமாக இலங்கையை பெரும் முன்னேற்றம் கொண்ட நாடாக மாற்ற முடியும் என்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான 70 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை நினைவுகூர்ந்த பிரதமர், ஜப்பான்- இலங்கை ஒத்துழைப்பின் வளர்ச்சிக்காகவும் சுதந்திரமான மற்றும் திறந்த இந்து - பசுபிக் பிராந்தியத்திற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற ஆர்வத்துடன் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது. (படங்கள் - உடப்பு நிருபர்)

## புத்தளம் மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(ரஸீன் ரஸ்மின்)

ஓரிரு வாரங்களுக்குள் கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுமானால், கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் கரையோர பகுதிகளான கற்பிட்டி, உடப்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானாந்த நேற்று முன்தினம் (06) கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் மீனவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

கற்பிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, துறைமுகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது ஆராய்ந்தார்.

இதன்போது, துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் கண்காணிப்பு கெமராக்களை பொருத்துதல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பாவனையற்ற படகுகளை அகற்றுதல் உட்பட பல்வேறு விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அவை தொடர்பாக தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கற்பிட்டி , உடப்பு மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார். மீனவர்கள் எதிர்நோக்கிவரும் மண்ணெண்ணெய் உள்ளிட்ட இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறல் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில்,

மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீனவர்களைப் பொருத்தளவில் பெரும் பிரச்சினையாகவே காணப்படுகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம். இதுதொடர்பில் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளேன். விரைவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் அனைத்து மீனவர்களுக்கும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் தனிப்பட்ட வகையில் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறேன்.

முடியுமானளவு குறைந்த விலையில் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இதேவேளை, இந்திய மீனவர்கள், ரோலர் மீன்பிடிப் படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பிற்குள் வருகின்றன.

இந்தப் பிரச்சினை மிக நீண்ட காலமாக காணப்படுகிறது. திருடனே பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று சொல்வார்கள்.

அதுபோலவே, இந்த விடயத்தில் இந்தியாவும் புரிந்து நடக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பிலும் இந்தியாவின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். இந்திய ரோலர் மீன்பிடி படகுகளினால் எமது நாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கடல்வளம் பாதிக்கப்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் விசேடமான ஏற்பாடுகள் முயற்சிக்கப்பட்டு வருகின்ற போதிலும், தற்போதைய சந்தை விலையில் மண்ணெண்ணெயை வழங்க முடியாமல் இருக்கிறது. விரைவில் கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான எரிபொருளை கிடைக்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எமது மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை முன்வைத்து தற்போதைய அரசாங்கத்துடனும், கருத்துகளை பரிமாறி வருகின்றேன். மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு துணை நிற்பது மாத்திரமன்றி, அவற்றை நிறைவேற்றுவதற்கும் முன்னின்று செயற்படுவேன் என்றார்.

## ஆஸியின் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத் தலைவராக ரிசா ஜமால் தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அவுஸ்திரேலியாவில் இயங்கும் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவராக ரிசா ஜமால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கம் மற்றும் சமூகத்தில் நன்கு அறிந்த நபராக, கிட்டத்தட்ட 02 தசாப்தங்களாக மெல்பேர்னில் வசிக்கிறார். அத்தோடு, சுமார் 30 வருட காலம் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் பல சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். மேலும் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்துக்கு பக்கபலமாக இருந்து உதவியுள்ளார்.

CIMA (UK)மற்றும் CA(Australia)உடன் செயற்படும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர், இப்போது அவுஸ்திரேலியாவின் USMAA (ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்க) த்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வில் முஸ்லிம் கவுன்சில் ஓப் சிறிலங்காவின் உயர்பீட உறுப்பினர் எம்.ரி.எம். றிஸ்வியும் கலந்து கொண்டார்.

## அரச வங்கியில் 6 கோடியே 83இலட்சம் ரூபா மோசடி உதவிப் பொது முகாமையாளர் விளக்கமறியலில்

### மோசடிக்கு உதவியதாக குற்றச்சாட்டு

அரச வங்கியொன்றில் இருந்து 06 கோடியே 83இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான மோசடிக்கு உதவியதாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ஒருவர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு கடவத்தை பிரதேசத்திலுள்ள அரச வங்கி ஒன்றில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து 48 தனிநபர் கடன் ஆவணங்கள் மூலம் 06 கோடியே 83இலட்சத்து 40ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு கிடைத்திருந்தது.

சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட நீண்ட நேர விசாரணையின் பின்னர் கடந்த 05ஆம் திகதி, குறித்த சந்தேக நபர் பண மோசடிக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் வங்கியின் கடன் பிரிவில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்ற 62 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது.

அவர் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும், இந்த மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தற்போது உயிரிழந்துவிட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# நானுஓயா வீதி தாழிறக்கம்; சாரதிகளுக்கு எச்சரிக்கை

## உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்கள் கோரிக்கை




(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவிவருகின்றது. இந்நிலையில், நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை செல்லும் பிரதான வீதி நானுஓயா சந்திக்கு அருகில் வீதி தாழிறங்கியுள்ளது.

நானுஓயாவில் இருந்து டெஸ்போட் வழியாக செல்லும் வீதியில் காபட் இடப்பட்டு சுமார் ஒரு வருடமாகியுள்ளவேளையில், அவை உரிய முறையில் சீரமைக்கப்படாததனால் தற்போது பாரியளவில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த வீதியில் பயணம் செய்யும் கனரக வாகனங்கள் இவ்விடத்தில் விபத்துக்குள்ளாவதற்கான சூழ்நிலைகள் அதிகமாக காணப்படுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் ஒரு வழிபோக்குவரத்து மாத்திரமே இடம்பெற்றுவருகின்றது.

தொடர் மழைகாரணமாக இந்த வீதியில் மேலும் பல இடங்களிலும் சிறியளவிலான மண்சரிவுகள், பிரதான வீதியில் வெடிப்புகள் என்பன ஏற்பட்டுள்ளதால் வீதியினை சீரமைக்கும் வரை அவ்வீதியினூடாக பயணங்களை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செல்லுமாறும், கனரக வாகனங்களை அவ்வீதியினூடாக செலுத்த வேண்டாம் எனவும் நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், இந்தப் பகுதி மேலும் தாழிறங்கும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த இடத்தில் விபத்தொன்று ஏற்படுவதற்கு முன் உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பல வீதிகளின் குறுக்கே மரம் முறிந்து விழுந்து போக்குவரத்து பாதிப்பு





(செ.திவாகரன்)

நுவரெலியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பலத்த காற்றும் வீசி வருகின்றது. மேலும் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்து மின்துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டுள்ள அதேவேளை, மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை காரணமாக தர்மபால சுற்று வட்டாரம், சென்.என்றுஸ் வீதி, கொல்ப் வீதி, குதிரைப்பந்தய திடல் கிராமம், ஆவேலியா, வைத்தியசாலை வீதி, மாகாஸ்தோட்டம், பொரலாந்த போன்ற பகுதிகளில் வீதியின் குறுக்கே மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், முறிந்து விழும் மரங்கள் மின்கம்பிகள் மீது விழுவதால் மின்கம்பிகள் அறுந்து தொடர்ந்து மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

# அக்குறணையில் வெள்ளத்தை கட்டுப்படுத்த நன்கொடை




(கண்டி நிருபர்)

கண்டி, அக்குறணையில் அடிக்கடி ஏற்படும் ஆற்று வெள்ளத்தை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையின்பேரில், மாவட்ட செயலாளரின் தலைமையிலான விசேட தொழில்நுட்பக் குழுவின் பிரேரணையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி, இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக அக்குறணை ஊடாக பாயும் பிங்கா ஓயாவின் வண்டல் மண் மற்றும் சகதி களை அகற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதுடன், இதற்காக USA Aidco நிறுவனத்திற்கு சுமார் 10மில்லியன் நன் கொடையாக கிடைத்துள்ளது.

USA Aidco பிரதிநிதி Travis Gardnerஇனால் பிங்கா ஓயாவிலுள்ள வண்டல் மண் அகற்றுவதற்குத் தேவையான இயந்திரத்தையும் கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோனிடம் 40இலட்சம் ரூபா பணத்தையும் வழங்கி வைத்தார்.

இந்த பிரத்தியேக இயந்திரம், சேறு மற்றும் மணலை எளிதில் பிரிக்கும் திறன் கொண்டதாகவும், பிரிக்கப்பட்ட மணலை, அரசுக்கு வருவாய் ஈட்டும் திட்டமாக பயன்படுத்த, மாவட்ட செயலர் தலைமையிலான தொழில்நுட்பக்குழு பரிந்துரை செய்துள்ளது.

எதிர்வரும் மாதம் முதல் பிங்காஓயா சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்கு அக்குறணை பிரதேச சபை விசேட அனுசரணையை வழங்கும் எனவும் பிரதேச செயலாளர் திருமதி இந்திகா அபேசிங்க தெரிவித்தார்.

# நுவரெலியாவில் சீரற்ற காலநிலையால் மூவர் உயிரிழப்பு: 1,853பேர் பாதிப்பு

## 1,397பேர் உறவினர்களின் வீடுகளில்; அனர்த்த முகாமைத்துவம் அறிக்கை

(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து வரும் சீரற்ற காலநிலையினால் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காணாமல்போயுள்ளதாகவும் 494 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 853பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நுவரெலியா மாவட்ட முகாமையாளர் ரஞ்சித் அலககோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நுவரெலியாவில் 337 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

இதுவரையில் 03 பேர் உயிரிழந்துள்ளதுடன் 03பேர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் 02 பாதுகாப்பு மையங்கள் செயற்பட்டு வருகின்றன. 05 குடும்பங்கள் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, இதில் 13பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர, பாதிக்கப்பட்டவர்களில் 389 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 397பேர் தங்களுடைய உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இதேவேளை, தொடரும் கடுமையான காலநிலையினால் நுவரெலியா மாவட்டத்தில் அம்பேகமுவ பகுதியே அதிகளவில் பாதிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக பல முக்கிய பாதைகள் தொடர்ச்சியாக மண்சரிவிற்குட்பட்டு வருவதால் அந்தப் பாதைகளை பாதை அபிவிருத்தி அதிகார சபை உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து உடனுக்குடன் பாதைகளை ஒழுங்கமைத்தாலும் போக்குவரத்து தடைபட்ட வண்ணமே உள்ளது.

இந்நிலையில், பொது மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் ஆறுகள், குளங்களை அண்மித்துள்ளவர்கள் மிகவும் நிதானமாக இருக்குமாறும் அதனை பார்வையிட செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளனர்.

அதேவேளை, பெற்றோர் சிறுவர்களின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துமாறும் பாதைகளில் பயணிப்பவர்கள் நிதானமாக செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

விசேடமாக அரசாங்க அதிகாரிகள் அல்லது இராணுவத்தினர் தங்களுடைய பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கிருந்த வெளியேறுமாறு உத்தரவிட்டால் அதனை கட்டாயமாக கடைபிடித்து அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய மாவட்ட முகாமையாளர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வனராஜா தோட்டத்தில் வலையில் சிக்காமல் மரத்தில் ஏறிய சிறுத்தைப்புலி

## மீட்கப்பட்டு 45 நிமிடங்களில் உயிரிழப்பு



(எம்.கிருஸ்ணா, க.கிருஷாந்தன்)

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா வனராஜா சமர்வில் தோட்டப் பகுதியில் ஆறு அடி நீளம் கொண்ட சிறுத்தைப்புலி ஒன்று மரம் ஒன்றில் இருப்பதை கண்ட பொதுமக்கள், ஹட்டன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகைதந்த ஹட்டன் பொலிஸார் சிறுத்தைப்புலியினை மீட்பதற்காக நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

குறித்த பகுதியில் இனந்தெரியாதவர்களினால் விரிக்கப்பட்ட வலையில் இந்த சிறுத்தைப்புலி மாட்டிக்கொண்டு மரத்தில் ஏறியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதேவேளை, வனவிலங்கு அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய பொதுமக்களின் உதவியுடன் குறித்த சிறுத்தைப்புலி மரத்தின் கிளையைவெட்டி மீட்கப்பட்டது.

எனினும், மீட்கப்பட்டு 45நிமிடங்களில் குறித்த சிறுத்தைப்புலி உயிரிழந்ததாகவும் அது பெண் சிறுத்தைப்புலி எனவும் நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுத்தைப்புலியின் இடுப்பு பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருந்ததாக தெரிவித்த வனவிலங்கு அதிகாரிகள் உடல் பரிசோதனைக்காக ரந்தனிகலை மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இ.தொ.கா. முன்வைத்த விடயங்கள் தீர்க்கப்படும்

## ஜனாதிபதி உறுதியளித்ததாக பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவிப்பு

(தலவாக்கலை நிருபர்)



மலையக மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக உரிய தீர்வை வழங்க தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் தெரிவித்துள்ளதாக முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடல் நடத்தியது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை பெற்றுக்கொடுக்கும் தனது முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி, மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த விடயங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, மலையக மக்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறை பிரச்சினைகள் பற்றியும், தொடர்ச்சியாக கோரிக்கைகளாகவே இருந்து வருகின்ற பிரச்சினைகள் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதில் பிரதானமாக நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த பிரதேச செயலகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும். சமுர்த்தி திணைக்களத்தினூடான சேவைகள் பெருந்தோட்ட பிரதேசத்தின் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் விஸ்தரிக்கப்பட வேண்டும். மேலும், ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியின் அனுமதி நடைமுறை காலம் கடந்ததாக காணப்படுகின்றது. இந்த அனுமதி நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தி தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மலையகப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்படுவதை நிவர்த்தி செய்து அவற்றை கிரமமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளதால் தோட்டங்கள் தோறும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உணவுப்பொருட்கள் விநியோகத்தை மேற்கொண்டு மக்களின் நாளாந்த தேவைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளை இலகுபடுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட எமது பிரதான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்பிலிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன.

அந்த வகையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்காலத்தில் அமைக்கப்படுகின்ற சர்வகட்சி அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழு ஜனாதிபதியிடம் தெரிவித்தது என்றார்.



கைது செய்யப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக்கோரி, கண்டி ஜோர்ஜ் ஈ.டி. சில்வா பூங்காவுக்கு முன் நேற்று (07) ஆசிரியர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (கண்டி நிருபர்)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கல்






(மஸ்கெலியா நிருபர்)

மலையகத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

வட்டவளை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 66 குடும்பங்களுக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் செஞ்சிலுவை சங்கத்தினூடாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

நிகழ்வுக்கு நுவரெலியா மாவட்ட செஞ்சிலுவை சங்கப் பணிப்பாளர் சமன் சந்திரசிறி மற்றும் வட்டவளை பிரதேச கிராம உத்தியோகத்தர் மிட்லன் பெரேரா, வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருட்களை வழங்கிவைத்தனர்.

மேலும், தற்போது நாட்டில் மீண்டும் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதால் அதற்கான பாதுகாப்பு கிருமிநாசினிகளும் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தீர்வை வலியுறுத்தி நாவற்குழியில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு










(சாவகச்சேரி நிருபர்)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வினை வலியுறுத்தி நேற்று முன்தினம் (06) நாவற்குழிப் பிரதேசத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பின் ஏற்பாட்டில் 100 நாட்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சனிக்கிழமை 06ஆவது நாளாக தென்மராட்சியின் நாவற்குழிப் பிரதேசத்தில் பொதுமக்கள், கிராம அடிப்படை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட கிராம மட்ட அமைப்புகளின் பங்குபற்றுதலுடன் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தில் பங்குபற்றிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். வடக்கு-கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஓர் ஜனநாயக உரிமையாகும்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்துவ அமைப்பு சார்பாக சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் பங்கேற்றிருந்தார்.

# யாழ். போதனா வைத்தியசாலை செல்வோருக்கான அறிவுறுத்தல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்ததுடன், பொதுமக்களுக்கான ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தொடர்பாக அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தொழிற்சங்கங்களுக்கும் பணிப்பாளருக்கும் இடையே நடந்த கலந்துரையாடலில், வைத்தியசாலை செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையிலே, வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது எனவும் கூறப்பட்டது.

பொதுமக்களுக்கான ஆலோசனைகள் -

1. நோயாளர்களை பார்வையிடுவதற்கு பார்வையாளர் நேரத்தில் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

2. நோயாளருடன் விடுதிகளில் உதவிக்காக ஒருவர் மட்டுமே தங்கி நிற்க முடியும்.

3. வைத்தியசாலை வளாகத்துக்குள் போதைப்பொருள் அல்லது மது பாவித்தவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களோ அல்லது உதவியாளர்களோ இரவு 7.30 மணிக்கு பின்னர் வைத்தியசாலையை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. விடுதிகளில் வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் தங்கள் கடமைகளில் ஈடுபடும்போது உதவியாளர்கள் விடுதியை விட்டு வெளியேறி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

6. வைத்தியசாலைக்குள் வருபவர்கள் வைத்தியசாலை சொத்துகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

7. நோயாளரை பார்வையிடுவதற்கு குழுக்களாக வருகைதருபவர்கள் எக்காரணம் கொண்டும் விடுதிகளுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்வதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றுள்ளது.

# முல்லை பங்குத்தந்தை அகஸ்ரின் அடிகளாரின் 25 வருட குருத்துவப் பணி வெள்ளி விழா




(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளார் அவரது குருத்துவப் பணி வாழ்வில் 25 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அவருடைய 25 வருடகால குருத்துவப் பணியை மதிப்பளிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் (06) புனித இராஜப்பர் ஆலயத்தில் குருத்துவ வெள்ளிவிழா நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக, கடந்த 1997ஆம் ஆண்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக தனது குருத்துவப் பணியை ஆரம்பித்த அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளார் 1999ஆம் ஆண்டுவரை யாழ். மரியன்னை ஆலயத்தில் பணியாற்றினார்.

தொடர்ந்து 1999ஆம் ஆண்டுதொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை முகமாலையில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். அதனையடுத்து, 2001ஆம் ஆண்டுதொடக்கம் 2005ஆம் ஆண்டுவரை வட்டக்கச்சியில் பங்குத்தந்தையாக தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

தொடர்ந்து 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள ஸ்டேட்டன் தீவிலும் அகஸ்ரின் அடிகளார் தனது குருத்துவப் பணியை மேற்கொண்டார்.

அதன்பின்னர் 2010ஆம் ஆண்டுதொடக்கம், 2012ஆம் ஆண்டுவரை சக்கோட்டையில் பங்குத்தந்தையாகவும், 2012ஆம் ஆண்டு தொடக்கம், 2016ஆம் ஆண்டுவரை மறைக்கல்வி நடுநிலையத்தின் இயக்குனராகவும், 2017ஆம் ஆண்டுதொடக்கம் 2020ஆம் ஆண்டுவரை சில்லாலை பங்குத்தந்தையாகவும், 2021இலிருந்து தற்போதுவரை முல்லைத்தீவு பங்குத்தந்தையாகவும் அந்தோனிப்பிள்ளை அடிகளார் தனது குருத்துவப் பணியைத் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றார்.

இந்நிலையிலேயே அவரின் இருபத்தைந்து வருட குருத்துவப்பணிக்கு மதிப்பளிக்கும் வகையில் முல்லைத்தீவு பங்கு மக்கள் இணைந்து பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அஸ்ரின் அடிகளாருக்கு குருத்துவ வெள்ளிவிழா நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில், விழாவின் நாயகனான முல்லைத்தீவுப் பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளாருக்கும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டிருந்த பங்குத் தந்தையர்களுக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், தவில், நாதஸ்வர மங்கல இசையுடன் முல்லைப் பங்கு மக்களால் ஊர்வலமாக வண்ணாங்குளம் புனித இராஜப்பர் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து திருப்பலி ஆராதனைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, முல்லைத்தீவுப் பங்குத்தந்தை இருபத்தைந்து வருட குருத்துவப் பணியை மேற்கொண்டதற்காக மதிப்பளிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக பங்குத்தந்தையர்கள் பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டிருந்தார்.

மேலும், இந்நிகழ்வில் பெருந்திரளான முல்லைத்தீவு பங்குமக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புளொட்டின் புதிய நிர்வாகம் தெரிவு



(யாழ். நிருபர்)

புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் (06) இணுவில் பகுதியிலுள்ள தனியார் மண்டபமொன்றில் சுந்தரம் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது. இதன்படி அக்கட்சியின் தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவுசெய்யப்பட்டார். கட்சியின் செயலாளராக நா.இரட்ணலிங்கமும் பொருளாளராக க.சிவநேசனும் ஊடகப் பிரிவின் தலைவராக பா.கஜதீபனும் சர்வதேச பேச்சாளராக செ.ஜெகநாதனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளில் இயங்குபவர்கள் உட்பட 145 பேராளர்கள் வரை கலந்துகொண்டிருந்ததுடன் தீர்மானங்களும் எட்டப்பட்டன.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# வட்டுக்கோட்டையில் திருடப்பட்ட பொருட்களுடன் இளைஞரொருவர் கைது



(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் நீர் இயந்திரங்கள் மற்றும் சைக்கிள்கள் திருட்டு போயுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இதனையடுத்து, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.பி.டி.கொஸ்தாவின் வழிகாட்டலில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி என்.எஸ்.டி.சத்திரசிங்கவின் தலைமையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய, கடந்த வெள்ளிக்கிழமை மாலை வட்டுக்கோட்டை பொலிஸார் வட்டு தெற்கு இன்பச்சோலை பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவரை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் பிரகாரம் வட்டுக்கோட்டை பொலிஸார் 08 சைக்கிள்கள் மற்றும் 08மின் மோட்டார் இயந்திரங்களையும் கைப்பற்றினர்.


# வவுனியாவில் வெற்றியடைந்துள்ள தேசிய ரீதியிலான எரிபொருள் அட்டை நடைமுறை


(வவுனியா நிருபர்)

எரிபொருள் விநியோகத்திற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய ரீதியிலான எரிபொருள் அட்டை (QR) முறைமை வவுனியாவில் வெற்றியடைந்துள்ளதுடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட நீண்ட வரிசைகளும் குறைவடைந்துள்ளன.

நாடுபூராகவும் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் முகமாக எரிசக்தி அமைச்சினால் தேசிய ரீதியிலான எரிபொருள் அட்டை கடந்த முதலாம் திகதிமுதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, வவுனியா மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுவதனால் குறிப்பிட்ட வாகனம் ஒன்று வாரத்தில் ஒரு தடவை மாத்திரமே எரிபொருளை பெற்றுச் செல்லக்கூடியதாகவுள்ளது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் கடந்த மாதம் வரை நாட்கணக்கில் காணப்பட்ட நீண்ட வரிசை தற்போது குறைவடைந்துள்ளதுடன், ஒருசில மணித்தியாலங்களில் இலகுவாக எரிபொருள் பெறக்கூடிய நிலைமையும் உருவாகியுள்ளது.



# நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் பங்கேற்பும் சர்வகட்சி அரசாங்கத்தில் அவசியம்

## ஜனாதிபதிக்கு ஹசன் அலி கடிதம்



நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகளின் பங்கு, பங்கேற்பு ஆகியனவும் சர்வகட்சி அரசாங்கத்தில் அவசியமானவை - என்று சுகாதாரத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பிய இவர், நேற்று ஞாயிற்றுக்கிழமை நிந்தவூரில் வைத்து ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு

நாட்டை மீளக் கட்டியெழுப்புகின்ற தேசிய வேலைத்திட்டத்தின் அடிநாதமாக சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து கட்சிகளும் இதில் பங்கேற்க வேண்டும் என்று ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளை மாத்திரம் அவர் அழைத்துள்ளார் என்றே விளங்குகின்றது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

ஏனென்றால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத பதிவுசெய்யப்பட்ட பல அரசியல் கட்சிகளுக்கும் உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் உள்ளார்கள். அதேபோல் கடந்த பொதுத் தேர்தலில் கணிசமான வாக்குகளை பெற்ற கட்சிகளும் வெளியில் உள்ளன.

மேலும், பொதுத் தேர்தலில் போட்டியிடாது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேறு கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுக்க பாடுபட்ட கட்சிகளும் இருக்கின்றன.

இனி ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் மக்களால் தெரிவுசெய்யப்படக்கூடிய கட்சிகளும் வெளியில் உள்ளன. மறுபுறத்தில் தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் மீதும், அவற்றின் எம்.பிக்கள் மீதும் மக்கள் நம்பிக்கையீனத்தையே பெரிதும் வெளிப்படுத்துகின்றனர்.

மேலும், கடந்த 05 வருடங்களுக்கும் மேலாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. எனவே, கடந்த மாகாண சபைத் தேர்தலில் மக்களாணையை பெற்ற கட்சிகளையும் சர்வகட்சி அரசாங்கத்தில் சேர்த்துக்கொண்டு பயணிக்க வேண்டும் என கோரி நிற்கின்றோம்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்க வருமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.

அதேபோல் புத்திஜீவிகள், தொழிற்சங்கவாதிகள், நாட்டுப் பற்றாளர்கள், பொதுநல செயற்பாட்டாளர்கள் ஆகியோரையும் உள்வாங்கிக்கொண்டு சர்வகட்சி அரசாங்கம் பயணிக்க வேண்டும்.

புத்திஜீவிகள் போன்றோரின் பங்கு, பங்களிப்பு ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காகவே தேசிய பட்டியல் முறைமை கொண்டு வரப்பட்டது. ஆனால், தேசிய பட்டியலில் இன்று நாடாளுமன்றம் வந்திருப்பவர்களில் அநேகரை காட்டிலும் பெறுமதிவாய்ந்தவர்கள் வெளியில் நிற்கின்றனர் என்பது இந்நாட்டின் துயரமாகும்.

# ஓட்டோ பிரயாணத்துக்கான நியாயத் தொகையை அறவிடுக!

## ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் நௌபர் வலியுறுத்து





(கல்குடா நிருபர்)

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பயணிகளிடம் இருந்து அறவீடு செய்யும் பிரயாணத்துக்கான தொகை நியாயமானதாக வரையறுக்கப்பட வேண்டும் என ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆட்டோ சாரதிகள் சங்கங்களினால் தற்கால எரிபொருள் பிர்சனைகள் தொடர்பில் ஓட்டமாவடி பஸ் தரிப்பு நிலைய கட்டடத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு விசேட கூட்டம் நடைபெற்றது.

ஓட்டமாவடி முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.எல்.எம்.புஹாரி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் உட்பட ஆட்டோ சாரதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது ஆட்டோ சாரதிகள் சங்கம் தற்போது எதிர்நோக்கும் எரிபொருள் மற்றும் பொருளாதார பிரச்சனைகள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு பெயர் பலகை இடல், குறிப்பிட்ட காலத்திற்கு புதிய தரிப்பிட அனுமதி வழங்குவதில்லை, சங்கத்தின் கீழ் செயற்படும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பயணிகளிடம் இருந்து அறவீடு செய்யும் பிரயாணத்துக்கான தொகை நியாயமானதாக வரையறுக்கப்பட வேண்டும்.

தற்போது முச்சக்கர வண்டிகளுக்கு கியூஆர் குறி முறைப்படி ஐந்து லீற்றர் பெற்றோல்கள் வழங்கப்படுகின்றன. தொழில் நிமித்தம் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு எரிபொருள் போதுமானதாக இல்லை இவைகள் குறைந்த பட்சம் வாரத்திற்கு 10 லீற்றராக அதிகரிக்கப்பட வேண்டும் என ஆட்டோ சாரதிகள் சங்கத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் சிபார்சு பெற்று இதற்கான அனுமதியை பெற்றுத் தருவதாக சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளூர் சேவைக்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பஸ் சேவையை பாடசாலை சேவைக்கு மாத்திரம் பயன்படுத்துவது தொடர்பாகவும் அதனை இடைநிறுத்துவதா என்பது தொடர்பிலும் பஸ் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஸ்டாலின் கைது அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகின்றது

## இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கம் கண்டனம்

(மண்முனை நிருபர்)




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஜோசப் ஸ்டாலின் நியாயத்திற்காக போராடிய ஒருவர். இவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகின்றது - எனத் தெரிவித்து இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்க ஆசிரியர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் செஹான் திஸாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண செயலாளர் கோபாலசிங்கம் சுஜிகரன் ஆகியோர் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை (05) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஜோசப் ஸ்டாலின், கடந்த 03.08.2022 அன்று கொழும்பு கோட்டை பொலிஸாரால் பிடியாணையின்றி கைதுசெய்யப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ள ஒரு சம்பவமாகும்.

மனித உரிமைப் பாதுகாவலர் ஒருவராக திகழ்பவரும் சமூகத்தின் நலனுக்காக முழு அர்ப்பணிப்புடன் வாழ்ந்துவரும் அசைக்கமுடியாத தொழிற்சங்கவாதியும் ஆசிரியர் நலன்காக்க உடன் களமிறங்கும் ஆற்றல்மிக்கவருமான ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டமை குறித்து இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கம் கிழக்கு மாகாணம் சார்பாக வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

உண்மையில் எமது இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கம் உட்பட தோழர் ஜோசப் ஸ்டாலினின் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் ஏனைய ஆசிரியர் சங்கங்கள் இணைந்து கடந்த காலங்களில் ஆசியர்களுக்கான சுயஉரிமைகளைப் பெற பல போராட்டங்களை நடத்தின. அந்த வகையிலேயே அண்மையில் முறையற்ற ஆட்சியை நடத்திய அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் அனைவரும் ஒன்றுதிரண்டு நாட்டில் ஸ்திரமான அரசாங்கத்தைக் கட்டியமைக்க போராடியிருந்தனர். அதில் தோழர் ஜோசப் ஸ்டாலின் முனைப்பாக இருந்த ஒருவர். நியாயத்திற்காக போராடிய ஒருவர் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளமை ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகின்றது.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களிடையே ஒரு வலிமையான பாலமாக விளங்கிய இவர், இனங்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தி வலிமைமிக்க நாட்டைக் கட்டியெழுப்ப விரும்பும் அனைவருக்கும் உறுதுணையாக இருந்த சமூகப் போராளியாவார். எனவே, இவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

சுகங்களுடனும் அவர் இல்லம் திரும்ப வேண்டும். அவரது விடுதலைச் செய்தி கிடைக்கும்வரை இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கம் தொடர்ந்தும் இந்த அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் என கிழக்கு மாகாண ஆசிரியர்கள் சார்பாக வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

# பசு மாடு வளர்ப்புத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 10 கிராம சேவகர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மற்றும் பால் மாடு வளர்ப்பில் அனுபவமுள்ள 35 குடும்பங்களுக்கு சுமார் 2,00,000 - 3,00,000 ரூபா பெறுமதியான பால் மாடுகள் வழங்கும் நிகழ்வு திட்டத்தின் முதலாம் கட்ட கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இக் குறித்த கூட்டத்தில் பசு மாடு வளர்ப்பது தொடர்பிலும் அதனை பராமரித்து பால் மூலமாக நாளாந்த வருமானமீட்டல் தொடர்பிலும் பயனாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. குறித்த திட்டம் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழியர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.



# வெல்லாவெளியிலிருந்து தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய பாதயாத்திரை ஆரம்பம்



(வெல்லாவெளி நிருபர்-க.விஜயரெத்தினம்)

பழம் தமிழர் பண்பாட்டு, கலாசாரத்தை பாதுகாக்கும் நோக்குடன் வெல்லாவெளி நெல்லிக்காடு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை நோக்கிய பாத யாத்திரையானது நேற்று ஞாயிற்றுக்கிழமை (7)காலை ஆரம்பமானது.

இந்த பாதயாத்திரையானது 5ஆவது தடவையாகவும் இவ்வாண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நெல்லிக்காடு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தி.தயாபரன் தெரிவித்தார்.

இந்த பாதயாத்திரையில் நூற்றுக்கணக்கான அடியார்கள் பங்குபற்றுவதுடன், மாவட்டத்தில் நாலாபுறமும் இருந்து தாந்தாமலை முருகன் ஆலய தரிசனத்திற்கு பாதயாத்திரைகள் இடம்பெற்று வருவதாக மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையினர் தெரிவித்தனர்.

# உலருணவுப் பொதிகள் தம்பலகாமத்தில் வழங்கல்



(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தாய், தந்தையை இழந்த பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் அண்மையில் (04) தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் Budfhas Light International Association எனும் அமைப்பின் அனுசரணையில் இடம்பெற்றது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் 12 பேருக்கு தலா 6,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, நன்னடத்தை சிறுவர் திணைக்கள ஆணையாளர் தனுஜா திசாநாயக்க, தாய்வான் நாட்டின் Buddhas சர்வதேச அமைப்பின் தென் ஆசிய இணைப்பாளர் பிக்குனி Chueh Men மற்றும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை இணைப்பாளர், மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் என பலர் கலந்து கொண்டனர்.



# அலிகார் மஹா வித்தியாலய மாணவிகளுக்கு செயலமர்வு

## வாழ்வியல் குறித்து விளக்கம்



(சீனக்குடா நிருபர் கியாஸ் ஷாபி)

கிண்ணியா அலிகார் மகாவித்தியாலய மாணவிகளுக்கு கட்டிளமை பருவம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று கடந்த 4ஆம் திகதி பாடசாலை அதிபர் எம்.எஸ்.அஹமட் ராஜி தலைமையில் நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த செயலமர்வில் சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஏ.எம். அஜித் வளவாளராக கலந்துகொண்டார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

மாணவர் பருவத்தில் கட்டிளமைப்பருவம் முக்கியமான ஒரு கட்டமாக காணப்படுகிறது. இப்பருவத்திலேதான் நீங்கள் வீட்டிலிருந்து சமூகத்தை நோக்கியதான பயணத்தை ஆரம்பிக்கிறீர்கள். இந்த காலப்பகுதியில் நீங்கள் செய்யும் செயற்பாடுகள், எடுக்கும் முடிவுகள் போன்றன உங்களின் எதிர்காலத்தை நல்லதாக அல்லது கெட்டதாக மாற்றப்போகும் சக்திகளாக காணப்படுகின்றன.

இந்தப் பருவத்தின் அறியாமையையும், உணர்ச்சி சார் நிலைமைகளையும் பலரும் பலவீனமாகப் பயன்படுத்த முயல்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் நாளாந்தம் நடைபெறுகின்ற இளவயது திருமணம், மனைவிமார் அதிகமாக வெளிநாடு செல்லல், கணவன் - மனைவி விவாகரத்து போன்ற விடயங்கள் சிறந்த சான்றாக உள்ளன. வன்முறைகளாலும் பாலியல்சார் நடத்தைகளாலும் இலகுவாகக் கவரப்படுகின்ற பருவமாகவும் இந்தப் பருவம் காணப்படுகிறது. மன அழுத்தம், மனச் சோர்வு என்பன இந்தப் பருவத்தினிடையே ஏற்படும் முக்கிய உள நெருக்கடிகளாகும். இந்தப் பருவத்தினர் இன, மொழி, கலாசார எல்லைகளைத் தாண்டி சினிமா நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் போன்றோரைத் தம் முன்மாதிரியாகக்கொள்வதில் ஆர்வம் செலுத்துபவர்களாகவுள்ளனர். இந்தப் பருவத்தில் ஏற்படும் சவால்களை சரியான வகையில் அடையாளம் கண்டு வாழ்வில் வெற்றிகொள்ளத் தேவைப்படும் திறன்களை நீங்கள் வளர்த்துக் கொள்வது ஒரு தேசிய கடமையாகும் - என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், ஆரம்பப் பிரிவு பாடசாலை பற்சிகிச்சை வைத்திய அதிகாரி பாத்திமா அன்சியா, பிரதேச சுகாதாரப் பரிசோதகர்களான எம்.எம்.ஆரிப், ஏ.எச்.எம்.இன்ஷாப், ஏ எம்.அக்ரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி

## ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பில் ஆரம்பம்

(வெல்லாவெளி நிருபர் க.விஜயரெத்தினம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான கொரோனா தடுப்புக்கான 4ஆம் கட்ட பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை (5) முதல் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிமனை, மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்குமான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொரோனா பரவல் ஆரம்பித்துள்ள நிலையில், 4ஆம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களுக்கு குறித்த 4 ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாகவும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் மேற்பார்வையினூடாகவும், மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.உதயகுமாரின் வழிகாட்டல் மூலமாகவும், மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் வி.விஜயகுமார், கல்லடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அமீர்தாப், புளியந்தீவுக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தீபக்குமார் உள்ளிட்ட மேலும் பல சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களினால் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதுடன், குறிப்பாக, 60 வயதுக்கு மேட்பட்டவர்களும், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் குறித்த தடுப்பூசியை செலுத்துவதனால் உயிர் ஆபத்தினை தவித்துக்கொள்ள முடியும் என்பதுடன், எமது நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் கொவிட்-19 பரவல் மீண்டும் ஆரம்பித்து வருவதுடன் மரணங்களும் பதிவாகி வருவதனால் தடுப்பூசியை பெற்றிக்கொள்வதன் தேவையை உணர்ந்து அனைவரும் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதுடன், முகக்கவசம் அணிந்து,சுகாதார நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து, உயிர் ஆபத்திலிருந்து தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



போராட்டக்காரர்களை கைதுசெய்தால் நாட்டில் போராட்டம் வெடிக்குமாம் எண்டு கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் சொல்லியிருக்காரு எலுவா?

அப்ப போராட்டக்காரர்களுக்கும் பேச்சாளர் சுமந்திரன்தானோ..?

இது என்னடாப்பா தமிழ்த் தேசியம் எண்டு புறப்பட்ட கூட்டமைப்பு இப்ப சிங்கள தேசியம் எண்டு கூத்துக்காட்டுறாங்க. கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறக்கூடிய வாய்ப்பை தட்டிக்கழிக்காதீர்; முஸ்லிம் தலைமைகளிடம் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள்

(சாய்ந்தமருது நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக்கொண்டு, அமையப்போகும் சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய நல்லதொரு வாய்ப்பை தட்டிக்கழித்து, தவறவிட வேண்டாம் - என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயத்தை வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதை இலக்காகக்கொண்டு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக சர்வகட்சி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருப்பதுடன், அதற்கான அழைப்பை அனைத்து கட்சிகளுக்கும் விடுத்திருக்கிறார்.

இவ்விடயமாக அரசியல் கட்சிகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார். சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி

கிழக்கிலங்கை முஸ்லீம் முன்னணி
Eastern Muslim Alliance
නැගෙනහිර මුස්ලිම් පෙරමුණ

உறுதியளித்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்காக போட்டியிட்ட டலஸ் அணியும் இதற்கு உடன்பட்டிருக்கிறது. ரணிலை அங்கீகரிக்காத மைத்ரி, விமல் வீரவங்ச, உதய கம்மன்பில போன்றோரும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, விக்னேஸ்வரன் அணி போன்றவை தமது சமூகம் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றுக்கான உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஜனாதிபதி ரணிலை சந்தித்து, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், அமைச்சுப் பதவி தவிர்ந்த சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர் ஏதாவது பேசினாரா என்பது பற்றி அறியக்கிடைக்கவில்லை.

அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தாம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என்ற ரீதியில் இதுவரை ஜனாதிபதியை சந்தித்து எதுவும் பேசவில்லை. இவ்விரு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக்கட்சிகள் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எடுக்கும் தீர்மானத்துடன் இணங்கிப்போதல் என்ற நிலைப்பாட்டுடனேயே தொடர்ந்தும் இருப்பதாக அறியமுடிகிறது.

எவ்வாறாயினும், சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு சஜித் பிரேமதாச உடன்பட்டிருக்கின்ற நிலையில் கூட சமூகம் சார்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாகப் பேசுவதற்கு இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் ஆர்வம் காட்டாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் ஒளிந்துகொண்டிருப்பதானது முஸ்லிம் சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் ஷூரா சபை, உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட தேசிய ரீதியிலான சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளையாவது பெற்று செயற்படலாம். எந்தவொரு தூரநோக்கு சிந்தனையும் இல்லாமல் தமது எதிர்கால பிரதிநிதித்துவ அரசியலை மாத்திரம் மையமாகக்கொண்டே முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளும் இருபதாவது திருத்தத்தை ஆதரித்துவிட்டு உதிரிகளாக இயங்குகின்ற அக்கட்சிகளின் எம்.பிக்களும் செயற்பட்டு வருகின்றனர்.

பல்வேறு கோரிக்கைகளுடன் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அதே கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்து, உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்டு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், இப்படியான நல்லதொரு வாய்ப்பை முஸ்லிம் கட்சிகள் தவறவிடப் போகின்றனவா என்று சமூகம் அங்கலாய்க்கிறது. தற்போது 24 மணி நேரமும் திறந்திருக்கின்ற ஜனாதிபதியின் வாசல் மூடப்பட்டால், பின்னொரு சந்தர்ப்பத்தில் எவ்வளவு தட்டினாலும் திறக்கப்படாமல், ஜனாதிபதியை சந்திக்கக்கூடிய வாய்ப்புக்கூட கிடைக்காமல் போகலாம்.

ஆகையால் முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இனியும் தாமதியாமல் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, ஜனாதிபதியினால் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் பேச வேண்டும் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது - என்று அதன் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## பதுக்கப்பட்ட எரிபொருட்களுடன் இருவர் கிண்ணியாவில் கைது

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக முச்சக்கரவண்டி ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்ட டீசல் கொள்கலன்கள் பொலிஸாரால் சுற்றிவளைக் கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை (05) கைப்பற்றப்பட்டன.

குறித்த சுற்றிவளைப்பின்போது 200 லீற்றர் டீசல் மற்றும் 100 லீட்டர் பெற்றோலும் கைப்பற்றப்பட்டதுடன், இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கிண்ணியா முனைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து முச்சக்கரவண்டியில் எரிபொருளை எடுத்து செல்லும் வழியிலேயே பொலிஸாரால் குறித்த முச்சக்கரவண்டி மடக்கிப்பிடிக்கப்பட்டு 04 கொள்கலன்களும் அவர்களது வீட்டிலிருந்து 4 கொள்கலன்களும் அடங்கலாக 8 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல் எரிபொருள் கலன்களை சந்தேக நபர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிண்ணியா சூரங்கள் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 23 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

## ரயில் மோதியதில் ஒருவர் மரணம்

### திருமலையில் சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் மோதியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டநாட்களுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த தபால் ரயில் நேற்று (07) காலை திருகோணமலையை வந்தடைந்தது.

இதன்போது சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீவரகம பகுதியில் குறித்த நபர் ரயிலுடன் மோதியதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை தீவரகம ரொட்டரி நிவாஸ பகுதியைச் சேர்ந்த பந்துல பீரிஸ் (49 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, கணவன் மனைவி இருவருக்கும் இடையில் கடந்த ஒரு வார காலமாக வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் வீட்டில் வசித்து வந்ததாகவும், நேற்றைய தினம் காலை 6.45 மணியளவில் ரயில் வந்துகொண்டிருந்தபோது வீட்டுக்குள் இருந்து வேகமாக வந்து பாய்ந்ததாகவும் உயிரிழந்தவரின் மனைவியான எல்.எச்.சாந்தினி பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மரணம் தொடர்பிலான விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலை இரவு ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

(கந்தளாய் நிருபர்)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கும் திருகோணமலைக்குமான தபால் புகையிரத சேவை நீண்ட நாட்களுக்கு பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி இரவு 9.30 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படுவதுடன், திருகோணமலையிலிருந்து இரவு 7.00 மணிக்கும் புறப்படும்.

முதல் வகுப்பு குளிரூட்டப்பட்ட, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு இருக்கை முன்பதிவு வசதியுடன் இரவு தபால் புகையிரத சேவை இடம்பெறும் எனவும் திருகோணமலை புகையிரத நிலைய அதிபர் தெரிவித்தார்.

## விதை நெல் உற்பத்தி அறுவடை விழாவும் விளைநிலம் மதிப்பீடும்





(மண்முனை நிருபர்)

பாரம்பரிய விதை நெல் உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநரின் நிதி உதவியில் திரசார குருஷி சங்ஸ்குருத்திய திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 187.5 ஏக்கரில் பாரம்பரிய நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில் மட்டக்களப்பு மத்தி வலயத்தின் கரவெட்டி விவசாய் போதனாசிரியர் பிரிவிற்கு 10 ஏக்கருக்கு பச்சைப் பெருமாள் எனும் பாரம்பரிய இனமும், மேலும் 20 ஏக்கருக்கு மடத்தவாலு எனும் பாரம்பரிய இனமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதன் அறுவடை விழா கடந்த வியாழக்கிழமை (04) பிற்பகல் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராசா தலைமையில் இவ்வறுவடை விழாவும், மதிப்பீடும் கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் இடம்பெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மத்தி பிரதி விவசாயப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, பாடவிதான உத்தியோகத்தர் களான சி.எல்.செந்தீபன், என்.லெட்சுமணன், மற்றும் விவசாயப் போதனாசிரியர்களான ரி.கோசலரூபன், என்.விவேகானந்தராசா, எம்.சிபான் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தென்னிந்திய சினிமா நடிகர் நாசருடன் மட்டக்களப்பில் இடம்பெற்ற கதையாடல்





( காத்தான்குடி நிருபர்)

தென்னிந்திய சினிமா இயக்குனரும் நடிகருமான கலைமாமணி நாசர் கலந்துகொண்ட சினிமா மற்றும் கலை தொடர்பிலான கதையாடல் நிகழ்வு நேற்று (07) மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கனெடி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நடிகர் நாசர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கதையாடலில் பங்கெடுத்தார்.

இக்கதையாடல் நிகழ்வில் விரிவுரையாளர்களான கலாநிதி சீவரட்னம், விமல்ராஜ், மோகன தாசன், திருச்சந்தூரன் ஆகியோர் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் பெற வரிசையில் நின்று வீடு திரும்பியவர் திடீர் மரணம்

### காத்தான்குடியில் சம்பவம்

(மண்முனை நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி எரிபொருள் நிலையத்தில் எரிபொருளை பெற வரிசையில் நின்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் கடந்த வியாழக்கிழமை (04) மாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதிவுகாரர் வீதி காங்கேயன்னோடை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான (வயது 62) முகம்மது இப்ராகிம் முகம்மது அபூபக்கர் என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து எரிபொருளை பெறுவதற்காக ஆரையம்பதி எரிபொருள் நிலையத்தில் வரிசையில் காத்திருந்தபோது அங்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்த எரிபொருள் நிறைவடைந்ததையடுத்து தனது வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது திடீரென வீதியில் மயக்கமுற்று விழுந்துள்ளார். சம்பவத்தை கண்டவர்களின் உதவியுடன் ஆரையம்பதி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் விசாரணைகளின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக் விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்டார் கல்லூரியின் “அறிவுச்சமர்” இறுதிப்போட்டி பரிசளிப்பு விழா







(மாளிகைக்காடு)

கல்முனை ஸ்டார் கல்லூரியினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “அறிவுச்சமர்” போட்டித் தொடரின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கல்முனை தனியார் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் கலந்துகொண்டார்.

அத்துடன், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஏ.எச்.நபார், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் மற்றும் கல்முனை கமு/அஸ்-சுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டதுடன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் அறிவு, தேடல் மற்றும் சுயகற்றல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டி நிகழ்ச்சியானது, லீக் போட்டி, காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி என பல சுற்றுகளாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




### பலஸ்தீனை சூழும் போர் மேகம்

# காஸா முனை மீது இஸ்ரேல் வான் தாக்குதல்: பயங்கரவாத அமைப்பின் 2ஆவது தளபதி பலி!

## அப்பாவி குழந்தைகள் அறுவர் உட்பட 31 பேர் உயிரிழப்பு; 260இற்கும் மேற்பட்டோர் படுகாயம்






பலஸ்தீனின் காஸா பகுதி மீது இஸ்ரேல் படைகள் நடத்திய வான் தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 31 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 260இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவத்துக்கும் இஸ்லாமிய ஜிஹாத் (ஐஜே) இயக்கத்தினருக்கும் இடையேயான இருதரப்பு மோதலால் அங்கு பதற்றம் நீடித்து வருகிறது.

இதேவேளை, பலஸ்தீன பயங்கரவாத அமைப்பின் 2ஆவது தளபதியொருவரும் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்குகரையில் 3 நாட்களுக்கு முன் பதுங்கியிருந்த பலஸ்தீன போராளி அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரை கைதுசெய்த இஸ்ரேல் படைகள், நேற்றுமுன்தினம் காஸா மீது வான் தாக்குதல் நடத்தின.

இதில், இஸ்ரேலில் பல தீவிரவாதத் தாக்குதல்களை நடத்திய தைசீர் அல்-ஜபாரி (Tayseer al-Jaabari) என்பவர் கொல்லப்பட்டார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பலஸ்தீனத்தின் மேற்குகரை மற்றும் காசா முனை பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இதற்கு இஸ்ரேல் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

மேற்குகரை பகுதியை ஹமாஸ் அமைப்பு நிர்வகித்து வருகிறது. ஹமாஸ் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக இஸ்ரேல் கருதுகிறது. காஸா முனையில் ஹமாஸ் மட்டுமன்றி, மேலும் சில ஆயுதமேந்திய பயங்கரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் காஸா முனையில் பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் என்ற பயங்கரவாத அமைப்பு ஒன்றும் செயற்பட்டு வருகிறது. பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் பயங்கரவாத அமைப்பு ஹமாஸ் உடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. ஆனால், இந்த இரு அமைப்புகளின் நோக்கங்களும் வேறு. இஸ்ரேலுடன் எந்த வகையிலும் இணக்கமாக செல்லக்கூடாது என்ற கொள்கையை பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பு தனது கொள்கையாக கொண்டுள்ளது. இந்த அமைப்பு ஈரானின் உதவியுடன் செயற்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் மூத்த தளபதியை கடந்த வாரம் மேற்குகரையின் ஜெனின் பகுதியில் இஸ்ரேல் கைதுசெய்தது. இந்தக் கைதை தொடர்ந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் பயங்கரவாத அமைப்பை குறிவைத்து இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் மேற்குகரை பகுதியில் அதிரடி வான்வெளி தாக்குதல் நடத்தி வருகிறது.

மேற்குகரையில் இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய வான்வெளி தாக்குதலில் பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் பயங்கரவாத அமைப்பின் ஆயுதக்குழு பிரிவான அல்-குவாட்ஸ் பிரிகெடிஸ் தளபதி தைசீர் அல்-ஜபாரி கொல்லப்பட்டார். மேற்குகரையின் வடக்கு பகுதியிலுள்ள பிரிவுக்கு தளபதியாக தைசீர் இருந்துவந்துள்ளார். இந்தத் தாக்குதலில் மொத்தம் 10 பேர் கொல்லப்பட்டனர். இதில், பயங்கரவாத அமைப்பினர், அப்பாவி குழந்தைகளும் உள்ளடங்குவர்.

**இரண்டாவது தளபதியும் பலி**

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது காஸாவிலிருந்து 400இற்கும் மேற்பட்ட ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதலுக்கு இஸ்ரேல் தரப்பிலும் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இரு தரப்புக்கும் இடையே தொடர்ந்து மோதல் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் காஸா முனையில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய வான்வெளி தாக்குதலில் பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் பயங்கரவாத அமைப்பின் மேலும் ஒரு தளபதி கொல்லப்பட்டுள்ளார்.



இந்தத் தாக்குதலில் காஸா முனையின் தெற்கு பகுதியில் பலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் பயங்கரவாத அமைப்பின் தளபதியாக இருந்த கஹலித் மன்சூர் (Khaled Mansour) கொல்லப்பட்டுள்ளார்.


இஸ்ரேல் கடந்த மூன்று நாட்களாக நடத்திவரும் வான்வெளி தாக்குதலில் பயங்கரவாத அமைப்பின் 2 தளபதிகள், பயங்கரவாதிகள் மற்றும் பொதுமக்கள், குழந்தைகள் என மொத்தம் 29 பேர் உயிரிழந்துள்ளதுடன், 260இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2021 மே மாதம் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் வெடித்தது. இதில் இஸ்ரேல், காஸா முனை, மேற்குகரையில் 11 நாட்கள் நடந்த மோதலில் 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தற்போது அதேபோன்ற சூழ்நிலை உருவாகியுள்ளதால் மீண்டும் போர் மூளும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

### போருக்கான முதல் கட்ட நடவடிக்கையை முன்னெடுத்தது சீனா

# தாய்வான் வெளியுறவு - இராணுவம் உட்பட முக்கிய துறைகளின் மீது சைபர் தாக்குதல்

## பதற்றத்தை தடுக்க சர்வதேச ஆதரவைக் கோருகிறார் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென்



தாய்வான் மீது போரை தொடங்குவதற்கு முன்னோட்டமாக அந்நாட்டின் வெளியுறவு, இராணுவம் உள்ளிட்ட பல்வேறு அமைச்சுகள் மீது சீனா சைபர் தாகுதல்களை தொடங்கியுள்ளது.

தாய்வான் பிராந்தியத்தில் போர் பதற்றத்தைத் தடுக்க சர்வதேச ஆதரவை வழங்க அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங்-வென் (Tsai Ing-wen) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாய்வான் தனி பிராந்தியம் அல்ல. சீனாவின் ஓர் அங்கமாகும் என்ற நிலைப்பாட்டை சீனா தொடர்ந்து உலகரங்கில் அறிவுறுத்தியுள்ளது. அதேவேளை, தாய்வான் பிராந்தியத்தின் தன்னாட்சி உரிமையை அமெரிக்கா துணை நின்று பாதுகாக்கும் என அமெரிக்க அரசு தொடர்ந்து கூறி வருகிறது.

இதனிடையே சீனாவின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, அமெரிக்கா சபாநாயகர் நான்சி பெலோசி சில நாட்களுக்கு முன் தாய்வானுக்கு சென்றார். இதனால், கோபமடைந்துள்ள சீனா, தாய்வானுக்கு போர் பீதியை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 4 நாட்களாக தாய்வான் நீரிணை பகுதியை சீனாவின் முப்படைகளும் சுற்றிவளைத்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. 100இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் இதில் ஈடுபட்டுள்ளன. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் வீசப்படுகின்றன. தாய்வானுக்கு தைரியம் கொடுக்க, அமெரிக்க போர்க் கப்பல்களும் அப்பகுதிக்கு விரைந்துள்ளன.

தாய்வானின் தேசிய பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "சீன போர்க் கப்பல்களும், போர் விமானங்களும் தாய்வான் நீரிணை பகுதியின் நடுகோட்டைத் தாண்டி வருகின்றன. சீனாவின் போர்ப் பயிற்சி, தாய்வான் மீதான தாக்குதலை தூண்டுவதாக உள்ளது" என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கடற்கரை மாகாணமான கின்மென், லியு தீவு, பெய்டிங் தீவு ஆகியவற்றை சுற்றி பறந்த சீனாவின் ட்ரோன்கள் மீது தாய்வான் இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது.

இந்நிலையில், தாய்வானின் வெளியுறவு, இராணுவ அமைச்சு உட்பட முக்கிய துறைகளின் மீது சீனா சைபர் தாக்குதல் நடத்தி கம்யூட்டர்களை முடக்கியுள்ளது.

குறிப்பாக, வெளியுறவு அமைச்சின் மீதான சைபர் தாக்குதல் கடந்த 2 நாட்களாக இருமடங்கு அதிகரித்துள்ளது. மேலும், தாய்வான் ஏவுகணை விஞ்ஞானியும். பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி, மேம்பாட்டுப் பிரிவின் துணைத் தலைவருமான ஓ யாங் லி-ஹ்சிங், ஹோட்டலில் மர்மமான முறையில் இறந்துள்ளார்.

அவர் மாரடைப்பால் இறந்ததாக கூறப்பட்டாலும், அவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுகிறது. இந்தச் சம்பவங்கள், சீனாவின் போருக்கான முன்னோட்டமாகவே கருதப்படுவதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தாய்வான் பிராந்தியத்தில் போர் பதற்ற நிலைமை அதிகரிப்பதைத் தடுக்க சர்வதேச ஆதரவை வழங்க தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவில்,

''தாய்வான் அரசும் இராணுவமும் சீனாவின் இராணுவப் பயிற்சிகள் மற்றும் போர் நடவடிக்கைகளை, நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. தேவையான பதிலடி நடவடிக்கைகளுக்கு தயாராக உள்ளன. தாய்வான் பிராந்தியத்தில் போர் பதற்ற நிலைமை அதிகரிப்பதைத் தடுக்க சர்வதேச ஆதரவை கேட்டுக்கொள்கிறேன்'' என சாய் இங்-வென் தெரிவித்துள்ளார்.

# 14ஆவது இந்திய குடியரசு துணை தலைவராக ஜெகதீப் தங்கர் தெரிவு



இந்தியாவின் 14ஆவது குடியரசு துணைத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜெகதீப் தங்கர், எதிர்வரும் 11ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

தற்போதைய குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் எதிர்வரும் 10ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில், அடுத்த குடியரசு துணைத் தலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி சார்பில் மேற்கு வங்க ஆளுநராக இருந்த ஜெகதீப் தங்கரும், எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக காங்கிரஸைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் மார்கரெட் ஆல்வாவும் போட்டியிட்டனர். மொத்தம் பதிவான 725 வாக்குகளில், 528 வாக்குகள் பெற்ற ஜெக்தீப் தங்கர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஜெகதீப் தங்கருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் 14ஆவது குடியரசு துணைத் தலைவராக ஜெகதீப் தங்கர் எதிர்வரும் 11ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். குடியரசு துணைத் தலைவராகத் தெரிவாகியுள்ள அவர், மாநிலங்களவைத் தலைவராகவும் செயற்படுவார்.

ராஜஸ்தானில் பிறந்த ஜெகதீப் தங்கர், மேற்கு வங்க ஆளுநராக பணியாற்றினார். 1993ஆம் ஆண்டில் ராஜஸ்தானிலிருந்து எம்.எல்.ஏ.ஆக தெரிவான அவர், எம்.பியாகவும், மத்திய இணையமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

# கியூபாவில் எண்ணெய்க் கிடங்கில் மின்னல் தாக்கியதில் வெடி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு; 120 பேர் படுகாயம்; 17 பேர் மாயம்

கியூபாவில் எண்ணெய் சேமிப்புக் கிடங்கில் மின்னல் தாக்கியதில் ஏற்பட்ட வெடி விபத்துகளில் ஒருவர் உயிரிழந்த நிலையில், 120இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 17பேர் காணாமல் போயுள்ளனர்.

கடும் மழை காரணமாக மடான்சாஸ் சிட்டி நகரிலுள்ள எண்ணெய்க் கிடங்கில் மின்னல் தாக்கி தீப்பற்றியது. இதனால் அடுத்தடுத்து 4 முறை வெடி விபத்து நிகழ்ந்ததால், எண்ணெய்க் கிடங்கிலிருந்து சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவுக்கு கரும்புகைமூட்டம் சூழ்ந்தது.

தகவலறிந்து விரைந்த தீயணைப்பு வீரர்கள் ஹெலிகொப்டர் மூலம் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். வெடி விபத்தில் 120 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

தீ விபத்து ஏற்பட்ட எண்ணெய்க் கிடங்கின் அருகே இருந்த 800 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். மேலும், காணாமல் போன 17 தீயணைப்பு வீரர்களை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# ஜனாதிபதியின் உரைக்கு ஏற்றமுறையில் அரசின் நடவடிக்கைகள் அமையவேண்டும்

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
The National Peace Council

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை தொடக்கிவைத்து நிகழ்த்திய கொள்கை விளக்கவுரை உலகினால் பாராட்டப்படக்கூடிய அளவுக்கு நல்லாட்சிமுறைக்கான தொலைநோக்கை வகுப்பதாக பாராட்டியிருக்கும் இலங்கை தேசிய சமாதானப் பேரவை, தனதுரையில் கூறிய விடயங்களுக்கு ஏற்றமுறையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைவதை அவர் உறுதிசெய்யவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரத்தியேகமான தன்மையை அங்கீகரித்து ஜனாதிபதி கைதுசெய்யப்பட்டிருக்கும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் போராட்ட இயக்க முன்னணி உறுப்பினர்களுக்கு முழுமையான மன்னிப்பை வழங்கவேண்டும் என்றும் கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்று பணிப்பாளராகக்கொண்ட தேசிய சமாதானப் பேரவை மேலும் கேட்டிருக்கிறது.

இது தொடர்பில் பேரவை வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

தற்போதைய நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைத்து கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்திய கொள்கை விளக்கவுரை உலகினால் மெச்சப்படக்கூடிய நல்லாட்சி மற்றும் பண்பு நயத்துக்கான நோக்கை வகுப்பதாக அமைந்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதியையும் பிரதமரையும் அமைச்சரவையையும் பதவிவிலகச் செய்த மக்கள் போராட்டங்களின்போது சட்டத்தை மீறிச் செயற்பட்டதற்காக போராட்ட இயக்கத்தின் பல தலைவர்களும் இளம் செயற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு நேரத்தில் ஜனாதிபதி அந்த உரையை நிகழ்த்தியிருக்கிறார்.

ஜனாதிபதி பதவியேற்றிருப்பதை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் தேசிய சமாதானப் பேரவை, அவரது நோக்கு மெய்மையாவதற்கு ஆதரவை வழங்குகிறது. தற்போதைய நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பல்வேறு புதிய முன்முயற்சிகளை எடுப்பதை நாம் காண்கிறோம். போராட்ட இயக்கமும் இந்நாட்டின் இளைஞர்களும் வேண்டிநிற்கின்ற முறைமை மாற்றம் (system Change ) என்பது பொருளாதாரக் கட்டமைப்பின் நிலைகுலைவுக்கு பங்களிப்புச் செய்த தற்போதைய நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் தற்போதைய கட்டமைப்புகளின் முற்றுமுழுதான மாற்றமேயாகும்.

இந்த தருணத்தில் ஜனாதிபதியிடம் நாம் ஐந்து விசேட வேண்டுகோள்களை முன்வைக்கின்றோம்.

(1) தடுப்புகளையும் சமப்படுத்தல்களையும் (System of checks and balances) வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் 22ஆவது திருத்தத்தை அமைச்சரவை அங்கீகரித்திருக்கிறது. அரசியலமைப்புப் பேரவையின் பத்து உறுப்பினர்களில் மூவர் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். ஆனால், அவர்களை தெரிவுசெய்வதற்கான தற்துணிபு அதிகாரம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு வழங்கப்படுகிறது. அதனால் அந்தத் தெரிவுகள் அரசாங்கத்துக்கு அனுகூலமாக அமையக்கூடிய சாத்தியம் இருக்கிறது. எனவே, அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தில் இருந்ததைபோன்று அரசியலமைப்புப் பேரவைக்கான சிவில் சமூக பிரதிநிதிகளை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் சேர்ந்து தெரிவுசெய்வதாக இருக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம்.

(2) உள்ளடக்கத்திற்காகவும் எடுத்தியம்பப்பட்ட முறைக்காகவும் பலராலும் பாராட்டப்படுகின்ற தனது கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற தனது யோசனையை மீண்டும் முன்வைத்தார். முன்னதாக இது தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் கடிதங்களை எழுதியிருந்தார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பருமன் மற்றும் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் சகல கட்சிகளுக்கும் சமமான முக்கியத்துவத்தை கொடுக்கக்கூடியதாக சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு நாம் ஜனாதிபதியை வலியுறுத்துகிறோம். ஆட்சிமுறைமையில் தங்களுக்கு ஓர் உரிமை இருக்கிறது என்று ஒவ்வொரு கட்சியும் உணரக்கூடிய முறையில் அமைச்சரவையை அமைக்கவேண்டியது அவசியமாகும்.

(3) தன்னை இன்று ஜனாதிபதியாக ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டுவந்ததில் போராட்ட இயக்கம் ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த பங்கை அவர் அங்கீகரித்திருக்கிறார். அமைக்கப்படவிருக்கும் தேசிய கொள்கை சபையில் போராட்ட இயக்கத்தவர்களுக்கு இடம் கொடுக்க ஜனாதிபதி முன்வந்திருக்கிறார். மேலும், போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு சர்வகட்சி அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

(4) கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி குறிப்பிட்டதைபோன்று சகல சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்களையும் குடும்பங்களையும் உள்ளடக்கிய மக்கள் போராட்டத்தின் பிரத்தியேகமான தன்மையை அவர் அங்கீகரிக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம். தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு அல்லது சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுபவர் களுக்கு முற்றுமுழுதான மன்னிப்பை வழங்குமாறு ஜனாதிபதியை நாம் கேட்டுக் கொள்கிறோம். அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு பங்களிப்புச்செய்த இளைஞர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது.

(5) நாடு இன்று எதிர்நோக்குகின்ற பொருளாதார இடர்பாடுகளும் செலவைச் சமாளிக்கக்கூடியதாக சம்பாதிக்க இயலாமல் இருக்கின்ற நிலையும் மக்களின் பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் மற்றும் ஜீவாதாரங்களில் பாரிய மறுசீரமைப்பை வேண்டிநிற்கின்றன. இதற்கு மக்களின் ஆதரவுடனும் புதிய ஆணையுடனும் கூடிய அரசாங்கம் ஒன்று தேவை. ஒரு வருடகால வரையறைக்குள் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம். சிறுபான்மைச் சமூகங்களுக்கு முக்கியமானதான நீண்டகாலமாக பின்போடப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல்களும் நடத்தப்படவேண்டும்.

போராட்ட இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களை தொடர்ச்சியாக கைதுசெய்யும் நடவடிக்கை துரதிர்ஷ்டவசமாக நாட்டின் மீது இருளைக் கவ்வ வைத்திருக்கிறது. ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில் கூறியவற்றை நடைமுறையில் செய்துகாட்டினால் அந்த இருளை அகற்றமுடியும். அதைச் செய்யாவிட்டால் அரசியல் உறுதிப்பாடு மற்றும் தேசிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சிக்கான எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் நழுவிப்போகும்.

அரசியல் உறுதிப்பாட்டை மீளநிலைநிறுத்துவதே உடனடித் தேவையாகும்.அதற்கான மார்க்கம் போராட்டக்காரர்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் எதிராக அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதல்ல, மாறாக நாடுபூராவும் இலட்சக்கணக்கில் இளையவர்களையும் முதியவர்களையும் வீதிக்கு இறக்கிய மூலக்காரணிகளை களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அத்துடன், போராட்டக்காரர்களுடன் அமைதி வழியில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான வழிவகைகளை கண்டறியவேண்டும். ஒருசில மாதங்களுக்குள் தங்களது வாழ்க்கைத்தரம் நிலைகுலைந்துபோய்விட்டதனால் திணறிக்கொண்டிருக்கும் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை அவர்களுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் கையாளவேண்டுமே தவிர, எதிர்க்குரல்களை மௌனப்படுத்துவதற்கு அவசரகால சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி வேட்டையாடக்கூடாது என்றும் அந்தப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

# மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய ஆடிப்பூர மஹோற்சவப் பெருவிழா



(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் 35ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவப் பெருவிழாவின் நகர் வலம் நேற்று முன்தினம் (06) ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. மயூரபதி ஆலயத்திலிருந்து ஹெவலக் வீதி, பாமன்கடை சந்தி, டபிள்யு ஏ சில்வா மாவத்தை, வெள்ளவத்தை சந்தி, காலி வீதி, டிக்மன்ஸ் வீதி வழியாக மயூரபதி கோயிலை வந்தடைந்தது.

நேற்றுக் காலை 06.00 மணிக்கு தீர்த்தோற்சவம் ஆரம்பமாகியது. மாலை 06.00 மணிக்கு இந்திர விமானத்தில் அம்பிகை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலை நோக்கி புறப்பட்டு காலி வீதியாக கோயிலை வந்தடைந்தது. இவ் வைபவத்தில் ஆயிரக்கணக்கான அடியார்கள் அம்பிகையுடன் வலம் வருகின்றனர். பூரண கும்பம் மண்டப்படி வைத்து அம்மனை தரிசித்து பேரருளைப் பெற்றுக்கொண்டனர்.

# கடற்றொழில் அமைச்சர் உடப்பு நகருக்கு விஜயம்



(உடப்பு நிருபர்)

ஆராச்சிக்கட்டு பிரதேச சபைத் தலைவர் க.தெட்சணாமூர்த்தி, இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் உட்பட அங்கத்தவர்கள் மற்றும் இயந்திரப் படகு உரிமையாளர்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர்களின் பல நாள் வேண்டுகோளையடுத்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடப்பு நகருக்கு நேற்று முன்தினம் (06) பகல் விசேட பயணம் ஒன்றை மேற்கொண்டு மக்களிடம் பிரச்சினைகளை அறிந்துகொண்டார்.

உடப்பு கடற்கரையில் அமைந்துள்ள, ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தில் அமைச்சருக்கு விசேட பூஜையொன்றும் இடம்பெற்றது.

பின்னர் கடற்கரை கடலரிப்பைப் பார்த்தோடு இறங்குதுறை மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினை, உடப்பில் எரிபொருள் நிலையம் அமைத்தல் போன்ற கோரிக்கைகளை மீனவர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதன்போது சாதகமான பதில்கள் அமைச்சரிடமிருந்து மக்களுக்கு வழங்கப்பட்டது.

# மொஹம்மது சல்மானுல் பாரிஸ் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



கெக்கிராவ, பண்டாரபொத்தானையைச் சேர்ந்த நூர் மொஹம்மது சல்மானுல் பாரிஸ், பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் அண்மையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கடான்டுகம முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை முஸ்லிம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், உருகுணை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் தனது பட்டப்படிப்பினை நிறைவு செய்து கௌரவப் பட்டம் பெற்றுள்ளதுடன், கொழும்பு சட்டக்கல்லூரியிலும் சட்டக்கல்வியை கற்று சட்டத்தரணியாக தெரிவானார்.

பண்டாரபொத்தானையைச் சேர்ந்த ஏ.சி.எல்.நூர் மொஹம்மது, ஏ.எம்.சிபானுன் நிஸா தம்பதியினரின் புதல்வரான இவர், பண்டாரபொத்தானை பிரதேசத்தின் முதலாவது பொறியியலாளர் மற்றும் முதலாவது சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமைச்சுப் பதவிகளை பகிர்ந்துகொள்வதற்குப் பதிலாக பொதுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துக!



## ஜனாதிபதியிடம் இதுதொடர்பில் எடுத்துரைத்துள்ளதாக ரிஷாட் எம்.பி. தெரிவிப்பு!

பதவிகளுக்கென கட்சிகளை ஒன்றுசேர்க்காமல், நாட்டுக்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும், அந்த வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவு கிடைக்கும் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார்.

சர்வகட்சி தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மாற்றியமைப்பதற்காகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையிலும், கியூவில் நின்று பொருட்களை பெறும் கலாசாரத்தை முற்றாக ஒழிக்கும் வகையிலும் ஜனாதிபதி எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம் எனவும் இச்சந்திப்பில் உறுதியளித்தோம்.

மேலும், காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குறிவைத்து கைதுசெய்யப் பட்டமை மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்டாலினின் கைது தொடர்பிலும் எமது ஆட்சேபனையையும் கவலையையும் தெரிவித்ததோடு, இவ்வாறான பயமுறுத்தல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை இன்னும் அதலபாதாளத்திற்கு கொண்டுசெல்லும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

19ஆவது திருத்தத்தை உடனடியாகக் கொண்டுவந்து, அதனை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும், நாடாளுமன்றத்தில் அமைச்சுகளை கண்காணிக்கும் குழுக்களை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம். அத்துடன், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி, வகைதொகையின்றி ஆட்களை கைதுசெய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்துவதுடன், அவசரகாலச் சட்டத்தில் தொடர்ந்து நீடிக்கக்கூடாது எனவும் வலியுறுத்தினோம்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி ஆட்சிக்கு வந்தவர்கள், கடந்த காலங்களில் நாட்டினதும், மக்களினதும் நலனைக் கருத்திற் கொள்ளாது செயற்பட்டமையை உணர்த்தியதுடன், இனவாதத்தை விதைப்பதன் ஊடாக தங்களது அரசியல் இருப்பு நீடிக்கும் என்ற தப்பெண்ணம் கொண்டு செயற்பட்டதனால்தான், இந்த நாடு இவ்வாறான கீழ்நிலைக்கு தள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆகையால், எதிர்காலத்தில் இனவாத சக்திகளின் கரங்களை ஓங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் எனவும், அந்த விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம் - என்றார்.

# பேருவளை அப்ரார் குர்ஆன் மத்ரஸாவில் இடம்பெற்ற முஹர்ரம் தின நிகழ்வு



( பேருவளை நிருபர்)

பேருவளை, மருதானை அப்ரார் குர்ஆன் மத்ரஸாவில் முஹர்ரம் தின நிகழ்வு மத்ரஸா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது

பள்ளிவாசல் இமாம் மௌலவி முஹம்மத் இல்லியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பொருளாளரும் இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ராரின் நிருவாக சபைத் தலைவருமான கலாநிதி மொவ்லவி அஹமத் அஸ்வர் அஸாயிதீன் (அல் அஸ்ஹரி) முஹர்ரம் மாதத்தின் சிறப்புகள் பற்றி விசேட உரை நிகழ்த்தினார்

பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களாக முஹீத்தீன் அப்துல்காதர் மொஹம்மத் யாகூத் உட்பட மத்ரஸா முஅல்லிம்களும் கலந்துகொண்டனர்.

# Commonwealth Games - 2022



## இலங்கைக்கு மற்றுமொரு வெண்கலம்

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 57 கிலோகிராம் எடைப்பிரிவின் மல்யுத்தப் போட்டியில் பங்கேற்ற நெத்மி பொருதொடகே இலங்கைக்காக வெண்கலப் பதக்கத்தை வென்று கொடுத்தார்.

இலங்கை நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கெமரூன் வீராங்கனை ஜோசப் எமிலின்னேவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறிய நெத்மி பொருதொடகே, அரையிறுதியில் இந்திய வீராங்கனை அன்சு மலிக்கை எதிர்கொண்டார்.

அரையிறுதிப் போட்டியில் 0-10 என தோல்வியடைந்த நெத்மி பொருதொடகே, மூன்றாவது இடத்துக்கான போட்டியில் அவுஸ்திரேலிய வீராங்கனை இரீனி சைமெண்டிஸை 10-0 என வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வெற்றிக்கொண்டார். நடப்பு பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்காக மூன்றாவது வெண்கலப் பதக்கத்தை அவர் வென்று கொடுத்தார்.



## ஆரம்பம் முதல் ஆஸி.க்கு முதலிடம்

2022 பொதுநலவாய விளையாட்டு விழாவின் 10ஆவது நாள் போட்டிகள் நேற்று நிறைவுக்குவந்த நிலையில், இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில், பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. 59 தங்கம், 46 வெள்ளி, 50 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 155 பதக்கங்களை வென்று அவுஸ்திரேலியா ஆரம்பம்முதல் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.

50 தங்கம், 52 வெள்ளி, 46 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 148 பதக்கங்களுடன் தொடரை நடத்தும் இங்கிலாந்து, இரண்டாவது இடத்தில் உள்ளது. 22 தங்கம், 29 வெள்ளி, 33 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 84 பதக்கங்களை வென்று கனடா மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது.

நியூசிலாந்து 17 தங்கம், 13 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களுடன் நான்காவது இடத்தில் காணப்படுகிறது. ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்ற இலங்கை ஒட்டுமொத்த பதக்கப்பட்டியலில் 27ஆவது இடத்தில் காணப்படுகிறது.




## 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவின் இறுதிநாள் இன்று

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளுக்கிடையிலான பொதுநலவாய விளையாட்டு விழாவின் 22ஆவது தொடர் கடந்த மாதம் 28ஆம் திகதி இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் அலெக்சாண்டர் அரங்கில் ஆரம்பமாகி கடந்த 10 நாட்களாக நடைபெற்றுவந்த நிலையில், தொடர் இன்றுடன் நிறைவுக்கு வருகிறது.

2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் 72 நாடுகள் கலந்துகொண்டன. இதில் தடகளம், பேட்மின்டன், ஹொக்கி, குத்துச்சண்டை, பளு தூக்குதல், கிரிக்கெட் உள்ளிட்ட 19 போட்டிகளும், 8 பாரா விளையாட்டுகளும் இடம்பெற்றன. சுமார் 6,500 வீரர்கள் மற்றும் குழு நிர்வாகிகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் முதன்முறையாக மகளிர் கிரிக்கெட் இடம்பெற்றது. இதற்கு முன்னர் ஒரேயொரு தடவை ஆடவருக்கான கிரிக்கெட் இடம்பெற்றிருந்த நிலையில், முதல் முறையாக மகளிர் கிரிக்கெட் இடம்பெற்றிருந்தது. இதில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அனைத்து போட்டிகளிலும் தோல்வியை தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக ஒரு மாற்றுத்திறனாளி உட்பட 110 வீர, வீராங்கனைகள் 14 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றிருந்தனர்.




## மே.இ. தீவுகளுடன் ரி20 தொடரையும் கைப்பற்றிய இந்தியா

இந்திய அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சென்று ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களில் விளையாடுகிறது. ஒருநாள் தொடரை இந்திய அணி 3-0 எனக் கைப்பற்றியது. இந்நிலையில், 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நடந்துமுடிந்த 3 போட்டிகளில் 2-1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. இதனைத் தொடர்ந்து 4ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் பந்துவீச்சை தெரிவுசெய்ய, முதலில் ஆடிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 191 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி தொடக்கம் முதல் இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

இறுதியில் 19.1 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டமிழந்தது. இதனால், 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றிபெற்று ரி20 தொடரையும் கைப்பற்றியது.




## 110 கிராம் நிறை, 7 செ.மீ. சுற்றளவுகொண்ட ஒலிம்பியாட் பதக்கம்

(ரமணி)

44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் கடந்த ஜூலை 28ஆம் திகதி தொடங்கின. ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை நடைபெற உள்ள இப்போட்டியில் உலகம் முழுவதும் உள்ள 187 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு சிறப்பான முறையில் செய்துவருகிறது.

இந்நிலையில், செஸ் ஒலிம்பியாட் போட்டியின் முடிவில் வழங்கப்படும் பதக்கத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் குறித்த தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன. இந்தத்




தகவலை சுற்றுலாத்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

“44ஆவது செஸ் ஒலிம்பியாட்டில் ஓபன் மற்றும் பெண்கள் பிரிவில் டொப்-3 இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கம் வழங்கப்படும். செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான பதக்கங்களை சர்வதேச செஸ் கூட்டமைப்பின் ஆலோசனை யுடன் தமிழக சுற்றுலாத்துறை வடிவமைத்துள்ளது.''

“சர்வதேச தரத்தில் நுணுக்கமான வேலைப் பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் பதக்கம் 110 கிராம் நிறையும், 7 சென்றி மீற்றர் சுற்றளவும் கொண்டது. பதக்கத்தின் ஒரு பக்கம் மாமல்லபுரத்தின் கடற்கரை கோவிலின் சின்னமும், இன்னொரு பக்கம் செஸ் ஒலிம்பியாட்டுக்கான லோகோவும் இடம் பெற்றுள்ளன. பதக்கத்தை இணைக்கும் ரிப்பன் தேசிய கொடியின் வண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது'' என்றார்.

## சாய்ந்தமருது நியூ ஸ்டாரை வீழ்த்தி வென்றது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ்

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வும், சாய்ந்தமருது நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்துடனான நட்புரீதியிலான 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி கிரிக்கெட் போட்டியும் அண்மையில் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரின் தலைமையிலான ரஹ்மத் பௌண்டஷன் அனுசரணையில் ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழக செயலாளர் எல்.எம்.சிப்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் அணி 20 ஓவர்களில் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களை பெற்றது.




பதிலுக்கு 171 எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினர் 16 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 86 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். வெற்றிக்கேடயத்தை அணியின் அமைப்பாளர் ஆசிரியர் எம்.எச்.எம்.முஸ்பிக்கு சமர்ப்பணம் செய்திருந்தனர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத்தின் வீரர் சபீர் தெரிவுசெய்யப்பட்டார். மேலும் அந்தப் போட்டியில் சிறப்பாக பந்துவீசிய மற்றும் பிடியெடுத்த வீரர்களின் திறமையை பாராட்டி அதிதிகளினால் பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இப்போட்டிக்கு அதிதிகளாக ரஹ்மத் பௌண்டஷன் ஆலோசகர் ஹாபீஸ் இர்பான், கிழக்கு மாகாண கணினி தொழில்நுட்பப் பேரவையின் பணிப்பாளர் யு.எல்.என்.ஹூதா, சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள், ஏனைய விளையாட்டுக் கழகத்தின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



## எஸ்.கே. சம்பியன் கிண்ணம் கற்பிட்டி விக்டரி ஜூனியர்ஸ் வசம்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி ஸ்லேபிங் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த அணிக்கு பதினொருவர்கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் அண்மையில் கல்பிட்டி அல்-அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இத்தொடரில் புத்தளம் மாவட்டத்தின் தலைசிறந்த 30இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கேற்றிருந்தன.

அதனடிப்படையில் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு விலகல் முறையில் இடம்பெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு கற்பிட்டியின் தலைசிறந்த கழகமாக விக்டரி ஜூனியர் அணியும் பாலக்குடா அணியும் தெரிவாகின. இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாலக்குடா அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பின்னர் 59 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களம் நுழைந்த விக்டரி ஜூனியர்ஸ் அணி, சப்னியின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன் 4.1 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 9 விக்கெட்டுகளால் வெற்றிகொண்டு எஸ்.கே. சம்பியன் மகுடத்தை தனதாக்கிக்கொண்டது. இறுதிப் போட்டியின் நாயகனாக சப்னி தெரிவானார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7